
Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU





முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஐப்பசி 13 திங்கட்கிழமை (29.10.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 029

தொடரும் அபாயம்


04

கிராக்கி

06

தொட்டில் பழக்கம்

07

சமர்ப்பணம்

09

குழந்தைக்கும் கஞ்சா

18

# இலங்கை குறித்த கேள்விகள் மீளாய்வு அமர்வில் சமர்ப்பிப்பு

(ஜெனிவா)

ஐ.நா.வில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள அகில கால மீளாய்வு அமர்வுகளில் சுமார் 99 நாடுகள் இலங்கை தொடர்பில் பேச உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. சில நாடுகள் முன்கூட்டியே இலங்கை தொடர்பான கேள்விகளை சமர்ப்பித்துள்ளன. மனித உரிமை மீற ல்கள், வட மாகாணசபைத் தேர்தல், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுலாக்கம் போன்ற விடயங்கள் குறித்து கேள்விகள் எழுப்பப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்கா, பிரித்தானியா, செக்குடியரசு, கனடா, ஸ்பெய்ன், டென்மார்க் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகள் ஏற்கனவே கேள்விகளை சமர்ப்பித்துள்ளன. இலங்கை விவகாரம் குறித்த விவாதத்தின்போது. ஒவ்வொரு நாட்டுக்கும் தலா ஒரு நிமிடம் 12 வினாடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் ஏன் தேர்தல் நடத்தத் தாமதிக்கப்படுகின்றது என அமெரிக்கா கேள்வி எழுப்பியுள்ளது. சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு சட்டங்களை அமுல்படுத்துவதில் கால தாமதம் நிலவி வருவதாக அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

சனல் - 4 வீடியோ, மூதூர் தன்னார்வத் தொண்டர் படுகொலை, திருகோணமலை 5 மாணவர்கள் படுகொலை, பொத்துவில் பிரதேசத்தில் பத்து தன்னார்வ தொண்டர்கள் படுகொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமற்போன விவகாரம், சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை ஆகியன தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.இதேவேளை, மெனிக்பாம் முகாம் மூடப்பட்ட போதிலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு அழுத்தம் கிருஷ்ணா வலியுறுத்து



இலங்கை விவகாரத்தில் இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் வழங்க வேண்டும் என இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணர் வலியுறுத்தியுள்ளார்: இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்து இலங்கை அரசுடனான இந்திய உறவுக்கு பாலமாக விளங்கிய கிருஷ்ணா தற்போது, தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செயதுள்ளார்.

அவர் தனது பதவி வில

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்கில் வெள்ளப்பெருக்கு அபாயம்


(மருதங்கேணி)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக நேற்றைய தினம் குடாநாட்டில் பெய்த மழையி னால் வடமராட்சி கிழக்குப் பகுதிகளான மருதங்கேணி, ஆழியவளை, உடுத்துறை ஆகிய பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயநிலை தோன்றியுள்ளதனால் அப்பகுதி மக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடும் காற்றுடன் கூடிய கனத்த மழை நேற்றிரவு வரை தொடர்ந்தது. இப்பகுதிகள் மிகவும் தாழ்வான பிரதேசங்களாகையால் மழை நீர் அப்பகுதிகள் முழுவதும் சூழ்ந்துள்ளது. சுனாமி அனர்த்தத்தினாலும், கடந்த கால போர் நடவடிக்கைகளாலும் இப்பகுதிகளிலுள்ள வடிகான்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## வட, கிழக்கு கரையோரப் பகுதிகளில் காற்றுடன் கூடிய பலத்த மழை



### மக்களை அவதானமாக இருக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக யாழ்ப்பாணம் தொடக்கம் மட்டக்களப்பு வரையான கரையோரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய கடும் மழை எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களிலேயே அதிகமான மழை வீழ்ச்சி காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கடலில் சுமார் 600 கிலோ மீற்றருக்கு அப்பால் தாழமுக்கம் நிலை கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும் அதன் நகர்வு குறித்து அறிவிக்கப்படவில்லை.

இக்காலநிலை தொடரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இக்காலப் பகுதியில் கடலுக்குச் செல்லும் மீனவர்களைக் கவனமாக இருக்கும் படியும் எச்சரிக்கப்பட்டுள்ளது. நேற்று வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி போன்ற பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

தற்போதைய காலநிலை தொடரும் பட்சத்தில் கடற்கரையோரங்களில் அநாவசியமாக நடமாடுவதையும், தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் கடலில் குளிப்பதையும், கடலில் இறங்கி விளையாடுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடற்கரையோரங்

19 ஆம் பக்கம் பார்க்க

## போர்க்குற்ற விசாரணை அவசியமா? பிரிட்டன் சென்ற குழுவில் முரண்பாடு

(லண்டன்)

புலம்பெயர்ந்து பிரிட்டனில் தங்கியுள்ள தமிழ் மற்றும் சிங்கள மக்களுடன் கலந்துரையாடலை இரண்டாவது முறையாகவும் நடத்துவதற்குச் சென்றுள்ள ஆளுங்கட்சி, ஐ.தே.க. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளம் பிரதிநிதிகளுக்கிடையில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணை அவசியமா என்பது தொடர்பாக முரண்பாடு நிலை ஏற்பட்டுள்ளதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதமும் பிரிட்டன் சென்ற இந்தத் தூதுக்குழுவினர் இரண்டாவது கட்டமாக புலம்பெயர் தமிழர்கள் சிலருடன் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளனர்.

பிரிட்டனில் வாழும் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகளைச் சந்

19 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரிலும் டெங்கு

மன்னாரில் இதுவரையில் அடையாளம் காணப்பட்ட 3 டெங்கு நோயாளர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக மன்னார் மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.குணசீலன் தெரிவித்தார்.

மன்னார், சாவக்கட்டு கிராமத்தில் 2 டெங்கு நோயளர்களும் தலைமன்னார் பகுதியில்

19 ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆவது திருத்தச்சட்டம் இரத்து; யோசனைத் திட்டம் பிழையானது

(கொழும்பு)



13ஆவது திருத்தச் சட்டத்தில் சில குறைபாடுகள் உள்ளதென்பதனை ஏற்றுக் கொள்கின்ற போதிலும், அந்த திருத்தச் சட்டமூலத்தை இரத்துச் செய்யும் யோசனைத் திட்டம் பிழையானதென சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

13ஆவது திருத்தச் சட்டத்தில் சில குறைபாடுகள் காணப்படுவனை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் அவற்றைத் திருத்தி காத்திரமான ஓர் அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ள வேண்டும்.

1983 ஆம் ஆண்டில் தேசியப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு சில ஆயுதக் குழுக்கள் உருவாகியிருந்தன.

1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து பல ஆயுதக் குழுக்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தல் வடக்கில் நடத்த தயார்



### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)


வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத் தத் தயார் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். எந்த நேரத்திலும் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்த தேர்தல்கள் திணைக்களம் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், எப்போது தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து அரசாங்கம் இதுவரையில் தமக்கு அறிவிக்கவில்லை என அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

இணையத்தில் தினமுரசு
www.thinamurasu.net

# இளைஞர்களின் அட்டகாசம் மல்லாவி நகரில் அதிகரிப்பு



(மல்லாவி)

மல்லாவிப் பிரதேசத்தில் இனம் தெரியாத இளைஞர்கள் சிலர் அட்டகாசம் செய்து வருகின்றனர்.

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் தனியார் கல்வி நிலையம் ஒன்றின் வாங்கு, மேசைகள் உடைக்கப்பட்டிருந்தன. மறுநாள் கழிவு ஒயில் வீசப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மல்லாவி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகக் கல்வி நிலைய நிர்வாகி தெரிவித்தார்.

அப்பிரதேசத்தில் சில பாடசாலைகளிலும் இனம் தெரியாத குழு ஒன்று நாசவேலைகளை கடந்த மாதம் புரிந்துள்ளது.

இதனால் இப்பிரதேசத்தில் கடமையாற்றும் யாழ். வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அப்பிரதேசத்தில் இவ்வாறான செயற்பாடு எதிர்கால சமூகத்தில் கல்வி வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என அப்பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (148)

# மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை

(மானிப்பாய்)

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தினரின் ஏற்பாட்டில் சங்கானை விழிசுட்டி சனசமூக நிலையத்தில் கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட்டதுடன் பதினெட்டு வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை பெறாதவர்களுக்கு அடையாள அட்டைபெற்றுக்கொள்வதற்கான பதிவுகள், மற்றும் பொதுமக்களது ஏனைய முறைப்பாடுகள் போன்றன பதிவு செய்யப்பட்டன.

அத்துடன் சிறுவர், பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், டெங்கு நோய் போன்றவற்றினால் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அவற்றினை ஒழிப்பது தெடர்பான வழிப்புணர்வுக் கருத்துக்கள் துறைசார் வளவாளர்களால் வழங்கப்பட்டது.

நிகழ்விற்கு உப பொலிஸ் பரிசோதகர் அபேயசிங்க, மற்றும் உபாலி, ஹரிச்சந்திர, மயூராச் , மதுகா, கிராமசேவகர், சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்நடமாடும் சேவையினால் தாம் காலதாமதமின்றி இலகுவில் சேவைகளை பெற்றுக்கொண்டதாகக் கலந்து கொண்ட மக்கள் கருத்துத் தெரிவித்தனர். (54)

# "திவிநெகும" திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

'திவிநெகும' செயற்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் தென்னங்கன்றுகள் விநியோகிப்பதற்கு நடவடிக்க்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நடவடிக்கைக்கான அனைத்து முன்ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டவிநியோகத்துக்குத் தேவையான தென்னங்கன்றுகள் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. அவை பயனாளிகளுக்கு தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு கன்றுகள் என்ற அடிப்படையில் அவை வழங்கப்பட்டு வருகின்றன. இந்த விநியோகம் கட்டம் கட்டமாக தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# வாசிப்பு மாத நிகழ்வு

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தின் தேசிய வாசிப்பு மாத விழா எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கணபதிப்பிள்ளை திருக்குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முல்லைத்தீவு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கரைத்துரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் து.செய்சோதிநாதன் சிறப்பு விருந்திரனராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கலைஞர் குமரநாதனின் 'அங்குரம்' சஞ்சிகை வெளியீடும் ஆசிரியர்களின் சிறப்பு பட்டிமன்றமும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (11)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்விக்கான பண உதவிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் தாய் தந்தையரை இழந்த 300மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டுக்கான பண உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு கழக (நெரிடோ) நிதிப்பங்களிப்பில் மாணவர்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் முள்ளியவளை பாரதி சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக த.செ.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் ஒரு மாணவனுக்கு ஒருமாதம் 750 ரூபா வீதம் 18 வயது வரை கல்வி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(04)

# 'நிலாமுற்றம் பகுதி10'

"ஊடகங்களின் சமூகப் பொறுப்பு" என்ற தொனிப் பொருளில் நிலா முற்றம் பகுதி 10 என்ற நிகழ்வு K.சூர்யா (சூரியன் எவ்.எம்.) தேவநாயகம் தேவாநந் (இயக்குனர் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிநிலையம் யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் தலைமையில் இன்று மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை இல: 82, பிறவுண் வீதி (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) உள்ள Nation Popular Travels & tpurs இன் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஊடகவியலாளர்கள் ஆய்வாளர்கள், சமூகவியளாளர்கள் விரிவுரையாளர்கள் பங்கு பெற்றவுள்ளனர்.

# வலி.மேற்கில் சவுக்கு மரம் நடும் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப்பகுதியில் சவுக்கு மரங்களை நாட்டும் புதிய செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த பிரதேச செயலர் பிரிவின் கரையோரப்பகுதிகளில் சவுக்கு மரங்களை நாட்டி அவற்றை வளர்த்தெடுப்பதற்காகவே இந்த புதிய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சுழிபுரம் கிழக்கு சுழிபுரம் மேற்கு, பொன்னாலை, அராலி மேற்கு மற்றும் அராலி தெற்கு ஆகிய கிராமங்களிலேயே இந்த செயற்திட்டம் அமுல்செய்யப்பட்டு வருவதாக வலிமேற்கு பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# உள்ளூராட்சி வார நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் முன்னாள் ஓய்வு பெற்ற நகர சபை ஊழியர்கள் உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் உத்தியோகத்தர்கள் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளது. (11)

# தீவக கல்வி வலயத்தின் "முழுநிலா" கலை நிகழ்வு

(வேலணை)

வடக்கு மாகாண கல்வித் திணைக்கழத்தின் அனுசரணையுடன் தீவக கல்வி வலயத்தினால் நடத்தப்படும் முழுநிலா நாள் கலை விழா இன்று காலை 9 மணிமுதல் வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் எஸ். சத்திய சீலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளதுடன் வடக்குமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச்செயலாளர் ப. விக்கினேஸ்வரன் தீவகவலயக் கல்விப்பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்கள கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் வ.ஸ்ரீஸ்கந்தராஜா ஓய்வுநிலை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வீ.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும். கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் நடனம், நாடகம், வடமோடிக் கூத்து போன்ற பல கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (54)

# சுகாதார சீர்கேடான மலசல கூடங்கள் உரியவர்கள் கவனம் எடுக்கவேண்டும்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் சந்தையில் அமைந்துள்ள மலசல கூடங்கள் மிக மோசமான நிலையில் இருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கொடிகாமம் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள இரண்டு மலசல கூடங்களும் மக்களினால் பாவிக்கப்படுகின்றது. இம் மலசலகூடங்களின் பராமரிப்பு மிகவும் மந்தமாகவே காணப்படுகின்றது. மிகவும் சுகாதார சீர்கேடாகக் காணப்படுகின்றது.

மழை காலம் என்பதால் சேறும் சுரியுமாக காணப்படுவதோடு சுத்திகரிக்கப்படாமல் காணப்படுவதாகவும் பொதுமக்கள் பலரும் புகார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தனியார் பஸ்தரிப்பிடத்தில் அமைந்துள்ள மலசல கூடங்களை துப்புரவு செய்யுமாறு பலரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டும் இதுவரை இதற்கான முடிவுவெதுவும் எட்டப்படவில்லை எனவும் பலரும் முறையிடுகின்றனர். (இ)





முல்லை.யோகபுரம் ம.வித்தியாலயத்தில் நடைபெற்ற வாணிவிழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும், விஜயதசமி அன்று பாடசாலை அதிபர் தி.த.யோகானந்தராஜா சிறுவன் ஒருவனுக்கு ஏடு தொடக்குவதையும் காணலாம். (148)

# ஆரோக்கிய சமூக உருவாக்கத்துக்கு பெற்றோரின் பங்களிப்பு அவசியம்

(அச்சுவேலி)

ஒவ்வொரு பெற்றோரும் மாணவப் பருவத்திலுள்ள தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் கண்காணிக்கத் தவறுவதனாலேயே சில பிள்ளைகள் நெறி தவறிச் செல்கின்றனர்.

கட்டுக்கோப்பான ஓர் தனித்துவமான பண்பாண்டு விழுமிங்களுடனும், பெருமையுடனும் காணப்பட்ட யாழ்ப்பாணம் இன்றைய இளைய சமுகத்தவர்களின் வெறுக்கத்தக்க சில செயல்களினால் பின்தள்ளப்பட்டுச் செல்கின்றது.

இந்த நிலை மாற்றப்பட்டு பழைய நிலைக்கு நாம் வர வேண்டுமாயின் ஒவ்வொரு பிள்ளையும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் என முன்னாள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர். வீ.இராசையா தெரிவித்துள்ளார்

புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசில் தின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்காலத்து சினிமாக்களும், நாடகங்களும் நம்மவர் மத்தியில் ஆழப்பதிந்து விட்டதால் இன்றைய இளைஞர்களின் போக்குகளும் அதே பாணியில் செல்வது மிகவும் கவலையளிக்கும் ஓர் விடயமாக உள்ளது. இந்நிலை இப்படியே தொடருமானால் எங்கள் இளையசமுதாயத்தின் நிலை கேளவிக்குறியாகத் தான் அமையும்.

பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை தான் அதற்காக பிள்ளையை வெறுமனே உண்டி கொடுத்து வளர்த்தால் மட்டும் போதாது. அவர்களை வீட்டுக்கும நாட்டுக்கும் உழைக்கக்கூடிய அறிவும், பண்பும், நல்லொழுக்கமும் கொண்ட நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண்டும். ஒரு பிள்ளை தன் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய பல விடயங்களையும், அனுபவங்களையும் பாடசாலைப் பருவத்தில் தான் கற்றுக் கொள்ளுகின்றது அவ்வாறு பெற்றுக்கொள்ளும் அனைதது விடயங்களையும் செம்மையுறப் பெற்றுக் கொள்ளும் ஓர்பிள்ளை நிச்சயம் ஒழுக்கம் மிக்க ஓர் எதிர்கால சமுதாயத்தை கட்டி வளர்க்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை என்றார். (032)





கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச உளநல நிகழ்வில் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற ஒருவருக்கு வேல்ட் விசன் அதிகாரி பரிசில் வழங்குவதைக் காணலாம்.

# கொள்ளையரின் தாக்குதலால் வயோதிபப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் கடந்த புதன்கிழமை வீட்டில் தனித்திருந்தவேளை கொள்ளையர்களால் தாக்குதலுக்குள்ளாகிய வயோதிபப் பெண் நேற்று முன்தினம் அதிகாலை யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த சோமசுந்தரம் ஈஸ்வரி (வயது - 70) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

அன்றையதினம் பிற்பகல் 2.00 மணிக்குப். பிற்பாடு வீட்டில் குறித்த பெண் தனித்திருந்தவேளை வீடு திறந்திருந்த தனைச் சாதகமாகப் பயன்படுத்திய கொள்ளையர்கள் வீட்டினுள் உட்புகுந்து அவரைத் தாக்கி கத்தியால்குத்தி படுகாயப்படுத்தி விட்டு அங்கிருந்து பணம் மற்றும் பொருட்களையும் நபர் அணிந்திருந்த சங்கிலி, காப்பு உட்பட நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

பகல்வேளை சாதுரியமாக மேற்கொள்ளப்பட்ட இந்தக் கொளளைச் சம்பவத்தை அடுத்து உறவினர் ஒருவர் பிற்பகல் 4.00 மணியளவில் அங்கு வந்த போது வீட்டின் உள்ளே யாரோ முனகும் சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது பெண் இரத்த வெள்ளத்தில் கிடந்திருக்கின்றார்.

உடனடியாகவே அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று அதிகாலை மரணமடைந்துள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் குறித்து மோப்ப நாய்களின் உதவியுடன் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின்போது கொள்ளையனின் ஒரு பாதணி பொலிஸாரால் அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# மாற்றுவலுவுடையோரை வலுவூட்ட வவுனியாவில் பாடல் போட்டி

(வவுனியா)

மாற்று வலுவுடையோருக்கான வலுவூட்டல் மையமானது எதிர் வரும் டிசம்பர் 4 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள மாற்று வலுவுடையோர் தினததை முன்னிட்டு பாடல் இறுவெட்டினை வெளியிடவுள்ளதை அடிப்படையாக கொண்டு பாடல் போட்டி யொன்றினை நடாத்தவுள்ளதாக மையத்தின் இயக்குனர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றுவலுவுள்ள உறவுகளின் தன்னம்பிக்கையை வலுப்படுத்தும் வகையிலும் அவர்களை சமூகத்தில் சமஉரிமையுடனும் சம வாய்ப்புடனும் நடத்தும் வகையில் உங்களுக்குள் நாம், மீண்டும் வாழ்வோம், இழப்பினும் சக்தியுண்டு ஆகிய கருப்பொருள்களில் பாடல் போட்டிகளை நடத்தவுள்ளோம்.

இப்போட்டியில் பங்குகொள்பவர்கள் ஏ4 அளவிலான தாளில் பாடல்களை அச்சிட்டு அவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், புகைப்படம் ஆகியவற்றுடன் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "VAROD பாடல்போட்டி 2012" எனக் குறிப்பிட்டு 30.10.2012 இற்கு முன்னதாக நிறைவேற்று இயக்குனர், வரோட், 4 ஆம் கட்டட, பம்பைமடு, வவுனியா எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கலாம் எனவும்

அல்லது varodsevre@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கமுடியுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது தெரிவு செய்யப்படும் சிறந்த பாடலொன்று இசையமைத்து பாடல் இறுவெட்டாக வெளியிடப்படும் எனவும் பாடலாசிரியருக்கு ரூபா 2000 சன்மானமாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (160)

# பண்டாரவன்னியன் நினைவுதினம் அனைவரும் அனுஷ்டிக்கவேண்டும்

(வவுனியா)

அடங்காப்பற்று எனப்படும் வன்னிப். பிரதேசத்தை இறுதி. யாக ஆண்ட தமிழ் மன்னன் பண்டாரவன்னியனின் நினைவு தினத்தை இலங்கைத்தீவில் வாழும் அனைவரும் அனுஷ்டிக்க வேண்டும் என வவுனியா வரியிறுப்பாளர் சங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னியை ஆண்ட தமிழ் மன்னன் பண்டாரவன்னியன் இத் தீவினை ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுவிப்பதற்கு வெள்ளையருடன் போரிட்ட மாவீரன்.


இன மத பேதமின்றி அனைதது தரப்பினருடனும் ஒன்றிணைந்த வெள்ளையருக்கு எதிராகப் போராடி இத்தேசத்தை வீரதேசமாக காட்டியவன். இதனால் இலங்கை அரசாங்கமும் தேசிய வீரனாக பண்டார வனனியனை பிரகடனப்படுத்தியுள்ளது.

அந்தவகையில் இலங்கையர் அனைவரும் எதிர்வரும் 31 ஆம் திகதியை பண்டாரவன்னியன் தினமாக அனுஷ்டிக்க முன்வரவேண்டும்.

தனிப்பட பண்டாரவன்னியனை ஒரு பிரதேசத்திற்கோ அல்லது ஒரு தரப்பினரோ உரிமை கொண்டாடுவதை விடுத்து தேசிய வீரன் என்ற நிலையில் அனுஷ்டித்தாலேயே வன்னிப்பிர தேசத்தினதும் அப்பிரதேச கலை கலாசார விழுமியங்களையும் இலங்கையர் உடபட வேறு தேசத்தவரும் உணர்ந்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)

மானிப்பாய் பொலிஸாரினால் சங்கானை விழிசுட்டி சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் உப பொலிஸ் பரிசோதகர் அபயசிங்க கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும், மக்கள் தொடர்பு அதிகாரி ஹரிச்சந்திர முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்வதையும் காணலாம். (54)





கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும்.
- முகம்மது நபி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பம்மாத்து அரசியல் எதுவரை?

எப்போதும் வழிகளை மூடிவிட்டுக் கொண்டிருப்பது சுலபம். வழியைத் திறந்துகொள்வதற்குத்தான் அதிக பிரயாசை மேற்கொள்ள வேண்டும். கோயில் கதவைத் திறக்க வைப்பதற்கு நாவுக்கரசர் பத்துப் பாடல்களைப் பாட வேண்டியிருக்கிறது. திருஞானசம்பந்தருக்கோ ஒரு பாடலிலேயே கதவு மூடி விடுகிறது. இதைப் பற்றி ஆன்மீகப் பேச்சாளர் ஒருவர் சொல்லக் கேட்ட கதை:

மூடிக் கிடந்தது கோயில் கதவு. திறக்கப் பாடுங்கள் என்றதும் திருநாவுக்கரசர் பாடினார். முதல் பாட்லுக்கு கதவு திறக்கவில்லை. அடுத்தடுத்துப் பாடிக்கொண்டே இருந்தார். பத்துப் பாடல்களுக்குப் பிறகுதான் கதவு திறந்தது. ஆனால் பிறகு கதவை மூடவேண்டும் என்றவுடன், ஞானசம்பந்தர் பாடிய முதல் பாடலுக்கே கதவு மூடியது.

திருநாவுக்கரசருக்கு இதனால் வருத்தமுண்டானது. என்ன இருந்தாலும் சம்பந்தன் ஞானப்பால் குடித்தவனல்லவா, அதனால்தான் முதல் பாடலுக்கே இறைவன் செவிசாய்த்து விட்டான் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார். ஆனால் அப்பருக்குக் கேட்ட அசரீரி அதனை மறுத்தது. "இல்லை... உனது முதல் பாடலுக்கே கதவு திறந்தால் அடுத்து நீ பாடியிருக்க மாட்டாய். உனது பாடல்களைக் கேட்கும் விருப்பத்தினாலேயே கதவு உடனடியாகத் திறக்கப்படவில்லை" என்று விளக்கம் கிடைத்ததாம்.

அது, இனிய தமிழுக்கு.இறைவனும் அடிமை என்று விளக்குவதற்காகச் சொல்லப்படுவது. இங்கு எந்தக் கதவையும் திறக்க விடாமல் ஒவ்வொரு கதவாய் மூடி மூடிக்கொண்டே வருபவர்களைப் பார்த்தால் இவர்கள் தங்களுக்குப் பிடித்தமான அந்தக் கதிரைகளுக்கு அடிமையாகி இருப்பதுதான் இப்படியான முட்டுக்கட்டைகளைத் தொடர்வதற்குக் காரணம் என்பதையே ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னரான வரலாற்றில், தமிழ்த் தலைமையாகத் தங்களை முடிசூடிக் கொண்டோர் மூடி வந்த கதவுகளையும், குழப்பி வந்த வாய்ப்புகளையும் திரும்பிப் பார்த்தால், இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழ் மக்களின் அமோகமான வாக்குகளைப் பெற்று நீண்டகாலமாகத் தொடர்ந்து பாராளுமன்றம் சென்று வந்துகொண்டிருப்பவர்கள் இந்தத் தமிழரசுத் தலைவர்களும் அவர்களது நீட்சிகளுமே.

அப்படியானால், தமிழ்மக்களின் பிரச்சினை தீராமல் தொடர்வதற்கும், இன்னும் நீங்காமல் இருக்கும் அவர்களது அல்லல்கள் அழிவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டியவர்கள் இவர்களல்லாமல் வேறு யார்? ஆனால், காலத்துக்குக் காலம் இவர்கள் வேறு யார் மீதிலாவது பழியைப் போட்டுக்கொண்டு தாங்கள் பாராளுமன்றம் போய் வந்துகொண்டிருப்பதே வரலாறாக இருக்கிறது.

சிங்கள ஆட்சியாளர்கள் சரிவரவே மாட்டார்கள், அவர்கள் அழிந்தால்த்தான் தீர்வு வரும் என்பார்கள். பிறகு தமிழர்களுக்குள்ளேயே உள்ள துரோகிகள் ஒழிந்தால்தான் தீர்வு வரும் என்பார்கள். இந்த முஸ்லிம்கள் முட்டுக்கட்டை போடுகிறார்களே என்று நம்மைவிட சிறுபான்மையாக இருப்போர் மீதும் வெறுப்பைக் கக்குவார்கள். திரும்பவும், இந்த நாட்டில் சிங்களவர் இருக்கும்வரை நமக்குத் தீர்வு வரவே வராது என்று ஆவேசப்படுவார்கள். அடுத்த நிமிடம் ஐ.தே.க. வுடன் தேசியக்கொடி உயர்த்துவதும், படைத்தளபதி சரத் பொன்சேகாவை ஜனாதிபதி ஆக்குவதும் தீர்வைக் கொண்டுவரத்தான் என்றும் சொல்வார்கள்.

இன்னும் பெரிய ஏமாற்றாக, சர்வதேசமும் இந்தியாவும் தான் எதையாவது செய்ய வேண்டும் என்று ஒரேயடியாகப் பம்முவார்கள். அவர்கள் சொல்வதையும் காதில் போட்டுக்கொள்ளாமல், குழப்பிக் குழப்பிக் கொண்டிருப்பதை மறைக்க வீர வசனங்களைப் பேசி மக்களுக்கு வெறுப்பும் ரோசமும் ஊட்டிக் கொண்டிருப்பார்கள்.

எதுவரை தொடரும் இந்தப் பம்மாத்து அரசியல்?

- ஆசிரியர்

# அரசியல் இணக்கப்பாடு இலங்கையில் அவசியம்

### வலியுறுத்தியுள்ளது அமெரிக்கா

(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் தமிழர் தரப்புடன் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசை அமெரிக்கா வற்புறுத்தியிருந்ததாக விக்கிலீகஸ் தகவல் வெளியிட்டிருககிறது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கைக்கான அமெரிகக முன்னாள் தூதுவர் றொபேரட் பிளேக்கும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும் அமெரிக்காவில் சந்தித்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருமளவான இடம்பெயர் மக்களை துரித கதியில் மீள்குடியேற்ற வேண்டுமென றொபேர்ட் பிளேக், பாதுகாப்புச் செயலாளரிடம் கோரியுள்ளார்.

தமிழ் சமூகத்துடன் அரசியல் நல்லிணக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு இந்த விடயங்கள் வழிகோலும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் சர்வதேச சட்ட மீறல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் கோரியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

அமெரிக்காவுடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் தனிப்பட்ட ரீதியில் ஆர்வம் காட்டி வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

நிலக்கண்ணி வெடி, உட்கட்டுமான வசதிகள் இன்மை, யுத்தத்தினால் வீடுகள் சேதமடைந்தமை போன்ற காரணிகளினால் மீள்குடியேற்ற பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

முகாம்களில் தங்கியிருப்போர் வேறு இடங்களுக்கு செல்ல முடியாது தங்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் பாரியளவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், வெற்றிகரமாக மீள்குடியேற்றப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குவது தொடர்பான ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் நாட்டை பிளவுடையச் செய்யுமே தவிர, நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதாவது என அவர், பிளேக்கிடம் குறிப்பிட்டார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

# மசகு எண்ணெய் இறக்குமதி அரசுக்கு தொடர்ந்தும் சோதனை

(கொழும்பு)

ஈரானில் இருந்து மசகு எண்ணெயை தருவிப்பதற்காக இலங்கையால் அனுப்பப்பட்ட கப்பல்கள் ஈரானின் கடல் எல்லையில் வைத்து அமெரிக்க கப்பல்களால் தடுக்கப்பட்டுள்ளதாகவும், அதனையடுத்து அந்தக் கப்பல்கள் சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அமெரிக்கா பச்சை விளக்கை காட்டும் வரை இலங்கையால் ஈரானிடம் இருந்து எவ்வித மசகு எண்ணெய் கொள்வனவையும் மேற்கொள்ளமுடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஈரான் தமது ஏற்றுமதிக் கொள்கையில் மாற்றங்களை கொண்டு வரவில்லை.

எனினும் அமெரிக்கத் தடை காரணமாக, இலங்கையை சிறிய கப்பல்களை அனுப்புமாறு ஈரான் கோரியது. அதற்கமைய கப்பல்களும் அனுப்பப்பட்டன. எனினும் ஈரான் செல்லும் கப்பல்களுக்கு காப்புறுதியை வழங்க காப்புறுதி நிறுவனங்கள் முன்வர மறுக்கின்றன.

இதன் காரணமாக ஈரானுடன் வங்கி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் சுசில் பிரேம்ஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

# வரிச்சுமையை அதிகரிக்கிறது அரசு

### ஐ.தே.க: கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கம் தன்னிச்சையான செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அததனகலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையில் நீண்டகாலமாக முரண்பாடுகள் காணப்படுகின்றன.

ஆனால் கடந்த மூன்று மாதத்தில் மாத்திரமே இந்த முரண்பாடுகளால் இலங்கைக்கு 2 பில்லியன் டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

தற்போது உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிக்கவும் இல்லை.

ஆனால் அரசாங்கம் வரிகளை அதிகரித்து மக்களை சிரமத்துக்குள் தள்ள வேண்டும் என்பதற்காக, அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையில் காணப்படுகின்ற முரண்பாடுகளை பயனபடுத்திக் கொள்கிறது என்று திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# இன்னமும் நீடிக்கிறது வெடிபொருள் அபாயம்

### விழிப்படைய மறுக்கும் பொதுமக்கள்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியான ஆனந்தபுரம் 5 ஆம் வட்டாரத்தில் பாடசாலை மாணவி குண்டொன்றுக்குப் பலியாகிய சம்பவத்தால் அப்பிரதேச மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளதோடு, கண்ணிவெடியகற்றும் பிரிவினரின் செயற்பாடு குறித்து தமது கவலையையும், அதிருப்தியையும் வெளியிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இப்பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் பொருளதார வசதிகள் இன்னமும் நிறைவு செய்து கொடுக்கப்படாத நிலையில், மீண்டும் இப்படியான் இழப்புக்களும் அவலங்களும் ஏற்படுவது பாரதூரமானவை மட்டுமல்ல, ஏற்றுக் கொள்ள முடியாதவையும் கூட என்று பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுவதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் வெடிபொருள் அபாயம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் மக்களிடத்தில் பரப்புரை செய்யப்பட்டும் மக்கள் இது குறித்து அலட்சியமாக நடந்துகொள்வதாக கண்ணிவெடியகற்றும் பிரிவைச் சேர்ந்த ஒரு பணியாளர் கவலையுடன் தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறது. (138)

# தமிழா!

# நீ மீண்டும் மீண்டும் ஏமாளியா?

எஸ்.வீரசிங்கம் (கனடா)

இக்கட்டுரையை எழுதுவதன் நோக்கம் அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பால் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு வேண்டுகோளாகும். அதாவது இலங்கையில் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்கிறார்கள் என்பதை சர்வதேசம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதாகவும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இலங்கையில் உள்ள தங்களின் உறவுகளை த.தே.கூ.க்கு வாக்களித்து தமிழ் மக்களின் பலத்தைக் கூட்டும்படி வற்புறுத்தும்படியும் கேட்டிருந்தார்கள்.

இதே த.தே.கூ. இலங்கை சுதந்திரமடைந்து 64 ஆண்டுகளைக் கடந்து கொண்டிருக்கிற இன்று வரை தமிழரசு என்றும், சமஷ்டி என்றும், தமிழ் ஈழம் என்றும் வெவ்வேறு முகங்களில் தோன்றி மக்களை ஏமாற்றியுள்ளனர். இவர்களின் இப்படியான பல முகங்களை மக்கள் அறிவார்கள். எனவே மீண்டும் இவர்களின் ஏமாற்றுப் பேச்சுக்கு மக்களின் ஆதரவு இல்லை என்று தெரிந்தவுடன், புலம்பெயர் தமிழ் மக்களின் ஆதரவை நாடியுள்ளனர். கடந்த 30 ஆண்டுகளாக எமது நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் அனுபவித்துவந்த நிம்மதியற்ற பயங்கரமான வாழ்க்கைக்கு 2009ஆம் ஆண்டுடன் முற்றுப்புள்ளி வைத்து, கொலைகளும் அழிவுகளும் இடப்பெயர்வுகளுமற்ற ஒரு வாழ்க்கை எமது மக்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் மறைத்து நாடகமாட முடியாது.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டமாக ஆரம்பிக்கப்பட்டு, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து. மனிதனைக் கடிப்பது போல, தனது இனத்தையே அழித்த பயங்கரவாதிகள் என்ற பட்டத்தைச் சுமந்தவர்களை, தமிழ் மக்களின் இரட்சகர்கள் என்றும், அவர்களால் தான் தமிழ் மக்களுடைய உரிமைகள் வென்றெடுக்கப்படும் என்றும், அரசியல் ஆய்வரங்குகள் செய்தவர்களும், 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் பலத்தைக் காட்டவும், தமிழ் ஈழத்திற்கான ஏகோபித்த குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்கச் செய்யவும் த.தே.கூ.விற்கே தமிழ் மக்கள் எல்லோரும் ஏகோபித்து வாக்களிக்க வேண்டுமென்றும், அரசாங்கத்திற்கு ஆதரவானவர்கள் துரோகிகள் என்றும் மேடைகளில் வாய் கிழியக் கத்தி 22 கூட்டமைப்பு அங்கத்தவர்கள் நாடாளுமன்றம் சென்றார்கள்.



இவர்களின் வீராவேசப் பேச்சுகளுக்கு கடைசியில் நடந்தது என்ன? மன்னாரில் இருந்து கிளிநொச்சி ஈறாக முள்ளி வாய்க்கால் வரை ஆட்டு மந்தைகள் போல் பச்சை மட்டைகளால் மக்கள் அடித்துத் துரத்திச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த பொழுதும், அதை மீறி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போக முற்பட்ட மக்களை நோக்கி புலிகளின் துப்பாக்கிகள் நீண்ட பொழுதும், இந்த 22 தமிழ் கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராவது புலிகளைப் பார்த்து "மக்களைத் துன்புறுத்தாதீர்கள், ஆயுதங்களைக் கீழே போட்டு பேச்சுவார்த்தைக்குப் போங்கள்" என்று சொன்னார்களா? இல்லையே? பதிலுக்குக் கடைசிவரை மக்களின் அழிவை இரசித்துக் கொண்டிருந்தார்கள்.

துன்பத்துக்குள்ளான மக்கள் தங்களு டைய உயிர்களைக் காப்பாற்ற இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று, அகதி முகாம்களில் தங்கி,அடிப்படை வசதிகள் இன்றி சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து, தற்பொழுது அரசாங்கத்தால் மீளக் குடியமர்த்தப்பட்டு ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களை, இனவாதம் பேசி அதே சேற்றில் மீண்டும் அமிழ்த்திவிட வந்துள்ளார்கள் த.தே.கூட்டமைப்பினர். எனவே மக்களே இவர்களையிட்டு விழிப்பாக இருங்கள்.

த.தே.கூட்டமைப்பினர் ஒவ்வொருவரின் பேச்சுகளிலும் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவு தங்களுக்கு உண்டென்றும், உலக நாடுகளின் ஆதரவு உண்டென்றும் கூறி வருகிறார்கள். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மக்கள் எல்லோரும் புலிகளுக்கோ அழிவுக்கோ ஆதரவானவர்கள் அல்ல. ஒரு சிறு கும்பலைத் தவிர ஏனையோர் புலிகளின் அடாவடித்தனங்களை அழிவுப்போக்கை எதிர்த்தவர்கள். இப்படியானவர்களை கூட்டமைப்பினர் "துரோகிகள்" என்று வாய் கூசாமல் சொன்னார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் துரோகிகள் எனத் தூற்றப்பட்டவர்கள் தான், அரசாங்கத்துடன் முரண்பட்டுக் கொள்ளாமல் நின்று, இந்தக் கொடிய யுத்தத்தால் விலை மதிக்க முடியாத உயிர்களையும் உடமைகளையும் இழந்து தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு பல வகையான உதவிகளைச் செய்து கொடுத்ததுடன், இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் பல அபிவிருத்திப் பணிகளை அரசாங்கத்தின் உதவியுடன் செய்து வருகிறார்கள் என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் கட்டாயமாக சிந்திக்க வேண்டும். தமிழ் தலைமைகள் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்று வரை ஆட்சியிலிருந்த முற்போக்கான அரசுகளுக்கு ஆதரவாகச்செயல்பட்டவர்கள் அல்ல. மாறாக ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஆதரவான ஐக்கிய தேசியக் கட்சிக்கே ஆதரவாகச் செயற்பட்டு வந்துள்ளனர்.

**மேதின ஊர்வலத்தில் ஐ.தே.க. வுடன் கொடியைப் பிடித்ததிற்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்டவர்கள், முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான மக்களின் அழிவுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் என்ற வகையில் அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்டார்களா? இல்லையே! ஏனெனில் அந்த அழிவை அவர்கள் எதிர்பார்த்தார்கள். மக்களின் அழிவை வெளிநாடுகளுக்குக் காண்பிப்பதின் மூலம் அரசியல் இலாபம் பெறலாம் என நினைத்தார்கள்.**

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனமென்றும், அவர்கள் இலங்கையில் தங்கியிருக்கலாமே தவிர உரிமைகள் கோரி போராடக்கூடாது என்றும், இனவாதத் திமிருடன் ஆணவமாகப் பேசிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை எங்களுடைய தமிழ் மக்களின் இரட்சகர்களான கூட்டமைப்பினர் ஆதரித்து மேடைகளில் முழங்கியதை மக்கள் மறந்துவிடவில்லை. அந்தத் தேர்தலில் சரத் பொன்சேகா வென்றிருந்தால் தமிழ் மக்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பது சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு தமிழனும் நன்கறிந்த விடயம். இது தமிழனுடைய அழிவில் சுகபோக வாழ்க்கை வாழ நினைக்கும் கூட்டமைப்பினருக்கு ஒன்றும் புதுமையல்ல.

1956இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்க காலத்திலிருந்து, அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, மகள் சந்திரிகா குமாரதுங்க ஈறாக இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரை, தமிழ் மக்களுக்கான உரிமைகளை ஏதோ ஒரு விதத்தில் வழங்க முன் வந்தார்கள். இவர்களால் எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாவற்றிற்கும் நாடாளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும் தமிழ் தலைமைகள் தடையாக இருந்ததுடன், ஐ.தே.கவுடன் சேர்ந்து குழப்பங்களை உண்டாக்கி தீர்வு நகல்களை கிழித்தெறிந்தும் எரித்தும் உள்ளார்கள்.

தற்பொழுதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.தே.கவின் கூட்டாளிகள்தான். ஒரு சிறு உதாரணம். இந்த ஆண்டு ஐ.தே.க. கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களால் யாழ்ப்பாணத்தில் நடாத்திய மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் கலந்து கொண்டு தங்களுடைய ஆதரவை வெளிப்படுத்தினார்களே! அது ஒன்றே போதாதா, மக்கள் இவர்கள் யார் என்று தெரிந்து கொள்வதற்கு? பின்னர் அதற்கு மன்னிப்பும் கேட்டிருந்தார்கள்.

ஐ.தே.க மேதின ஊர்வலத்தில் ஐ.தே.க. வுடன் கொடியைப் பிடித்ததிற்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்டவர்கள், முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான மக்களின் அழிவுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் என்ற வகையில் அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்டார்களா? இல்லையே! ஏனெனில் அந்த அழிவை அவர்கள் எதிர்பார்த்தார்கள். மக்களின் அழிவை வெளிநாடுகளுக்குக் காண்பிப்பதின் மூலம் அரசியல் இலாபம் பெறலாம் என நினைத்தார்கள். எனவேதான் அரசியலில் இவர்கள் செல்லாக்காசாகி விட்டார்கள்.

அடுத்த விடயம், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளில் சில உதிரிக் கட்சிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா செல்லும் வேளைகளில் கறுப்புக்கொடிகாட்டி ஆர்ப்பாட்டம் செய்வதெல்லாம், அவர்கள் எமது நாட்டில் உள்ள தமிழ் மக்களின் மேல் உள்ள அனுதாபத்தினால் அல்ல. அவர்கள் ஒவ்வொருவரும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் புலிப் பினாமிகளிடமிருந்து வாங்குகின்ற பணத்திற்கு விசுவாசம் தெரிவிக்கவே அவ்வாறு செயல்படுகிறார்கள். இந்தப் பித்தலாட்டக்காரர்களின் செயல்களால் எமது நாட்டில் தற்பொழுது நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் கஷ்டங்களை அனுபவிக்கும் சூழ்நிலையே உருவாகும்.

இந்த தமிழின பிழைப்புவாதிகள் 25 இலட்சம் இலங்கைத்தமிழ் மக்களுக்குத்தமிழ் ஈழம்பெற்றுக் கொடுப்பதை விடுத்து, வேண்டுமானால் 6 கோடி தமிழ் மக்கள் வாழும் தமிழ்நாட்டில் ஒரு தனிநாடு அமைக்கப் போராடுவது வரவேற்கக்கூடியது. வேண்டுமானால் நாங்களும் உதவலாம். இந்த உதிரிக் கட்சிகளின் தலைவர்கள்தான் இலங்கையிலிருந்து செல்லும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை விமான நிலையத்தில் வரவேற்பவர்கள். இந்த விடயம் குறித்து தமிழ் மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட ஒவ்வொரு தமிழ் மகனும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துள்ளது.

அத்துடன் தமிழ் மக்களாகிய நாங்கள், கடந்த காலங்களில் இனரீதியாகப் பட்ட கஷ்டங்களைப் பார்க்கிலும், சமூக ரீதியான ஒடுக்குமுறைக் கஷ்டங்களையும் அனுபவித்துள்ளோம். இவைகள் எல்லாவற்றிற்குமாக களத்தில் நின்று போராடி அந்த மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தவர்கள் இடதுசாரிகளும் முற்போக்கு சிந்தனை கொண்டவர்களும் தான். இன்று நம்மத்தியில் பலர் அனுபவிக்கும் உரிமைகள் இடதுசாரிகளின் போராட்டத்தால் கிடைத்த வெற்றிகளாகும்.

எனவே தமிழ் மக்களாகிய நாங்கள், இலங்கையர்கள் என்று பெருமையுடன் வாழ வேண்டுமானால், இனவாதம் பேசி மக்களை ஏமாற்றுபவர்களை தூக்கி எறிந்துவிட்டு, இடதுசாரிகளையும், முற்போக்கு சிந்தனை கொண்டவர்களையும் ஆதரிப்பதின் மூலம், சகல மக்களுடனும் இணைந்து சுபீட்சமாக வாழலாம். இதுவே புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் முற்போக்கு சிந்தனையாளர்களின் கருத்தாகும். எனவே தமிழ் மக்களே சிந்தியுங்கள்!

# இனங்களுக்கிடையில் முரண்பாடு இல்லை

# புலிகளே சமாதானத்தின் எதிரிகள்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது என பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வரலாற்று கால மாக தமிழ் மக்கள் சில பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்த போதிலும் இன முறுகல்கள் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.**



தமிழீழ விடுதலைப் புலிகள் எந்தக் காலத்திலும் சமாதானத்தை விரும்பவில்லை எனவும், மாறாக சமாதான பேச்சு வார்த்தைகளைப் பயன்படுத்தி வன்முறைகளில் ஈடுபட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதாக அறிவித்த போதிலும் உண்மையில் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளவும், தங்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளவுமே முயற்சித்ததாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இன, மத, மொழி, ஜாதி, பால் அடிப் படையில் இலங்கையில் எவருக்கும் சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை புள்ளி விபர ரீதியில் நிரூபிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் சகல இனங்களையும் சேர்ந்த மாணவ மாணவியர் கல்வி பயின்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் சேவைகளில் எவருக்கும் ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப் படுவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இனங்களுக்கு இடையில் பாரியளவில் முரண்பாடுகள் எதுவும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் சமூகத்துடன் மீள இணைக்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஏ.ரி.எம். மோசடி

# இலங்கையர் இருவர் கனடாவில் கைது

(கொழும்பு)

கனடாவில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த இரண்டு தமிழர்கள் அமெரிக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி பணப்பரிமாற்ற அட்டைகளைப் பயன்படுத்தி பல்வேறு வங்கிகளின் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரங்களில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டதாக குற்றம்சாட்டியே நியூயோர்க் பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

சிவரூபன் ஞானபண்டிதன் (வயது - 28), ராகவன் பத்மசீலன் (வயது -24) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்கள் கனடாவின் ஒன்ரோரியோவில் வசித்து வந்தவர்கள். கடந்த வெள்ளிக்கிழமை இரவு தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரத்தில் இருந்து பணத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப் பட்ட இவர்களிடம் இருந்து, 257 போலி பணப்பரிமாற்ற அட்டைகள், 55,689 டொலர் பணம் போன்றவற்றை நியூயோர்க் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# பிரிட்டிஷ் விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க முடிவு


(கொழும்பு)

யுத்த நிலவரம் காரணமாக சில வருடங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் எயார் வேஸ் விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

இதன்படி அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் கட்டுநாயக்க சர்வ்தேச விமான நிலையத்திலிருந்து இந்த விமான வேவை ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் தற்சமயம் அமைதியான சூழ்நிலை நிலவுவதுடன் இலங்கைக்கு வரும் உல்லாச பயணிகளின் எண்ணிகையை பெருமளவு அதிகரித்திருப்பதும் இந்த விமானச் சேவை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணமாகும்.

அவ்வாறே இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான நட்புறவு மேலும் வலுவடைகிறது. எமது நாட்டைப்பற்றி ஒரு



சில தீய சக்திகள் மேற்கொண்ட பொய் பிரசாரத்துக்கு பதிலடியாகவும் இது அமைவதுடன் இலங்கையரான எமக்கு பெருமைப்பட வேண்டிய விடயமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# மீண்டும் பிரேத பரிசோதனை; நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில், உயிரிழந்தவர்களின் சடலங்களை தோண்டி எடுத்து விசாரணை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் லயன் எயார் பயணிகள் விமானமொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் பூநகரி பிரதேச கடலிலிருந்து மீட்கப்பட்டு, புதைக்கப் பட்டது.

இவ்வாறு புதைக்கப்பட்ட சடலங்களை தோண்டி எடுத்து மீளவும் விசாரணை நடாத்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தீர்மானித்துள்ளனர். சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய விரைவில் இந்தச் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணை நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# அதிகாரப் பகிர்வு கிராமிய மட்டத்தில் வேண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார் திஸ்ஸ

(கொழும்பு)

கிராம மட்டத்தில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் யோசனைத் திட்டம் பிழையானது.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் மாகாணசபை முறைமை அமுல்படுத்துவது மட்டுமன்றி வடக்கில் மாகாணசபை நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டத்தில் சில குறைபாடுகள் காணப்படுவதனை ஏற்றுக் கொள்கின்றோம்.

அவற்றைத் திருத்திக்கொண்டு காத்திரமான ஓர் அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ள வேண்டும்.

1983 ஆம் ஆண்டில் தேசியப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு சில ஆயுதக் குழுக்கள் உருவாகியிருந்தன.

1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து பல ஆயுதக் குழுக்கள் அரசியல நீரோட்டத்தில் இணைந்து கொண்டன.

எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை பிழையாக வழிநடத்த 13 ஆம் திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமென ஒன்றிரண்டு கட்சிகள் கோரிய போதிலும் அரசாங்கத்தின் நிலைப்பாடு அதுவல்ல.

பாதுகாப்புச் செயலாளர் 13 ஆம் திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து எதனையும் கூற விரும்பவில்லை.

தனிப்பட்ட நபர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கப் போவதில்லை.

அரசாங்கம் என்ற ரீதியில் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான நிலைப்பாடு மாறுபட்டே காணப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இணைந்து எடுக்கும் தீர்மானங்களே அரசாங்கத் தீர்மானங்களாக கருதப் பட வேண்டும்.

வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தி மாகாணசபை ஆட்சியை நிறுவ வேண்டும்.

இதனையே ஜனநாயக அரசியலா்கக் கருதப்பட வேண்டுமென திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

# கட்டாரில் இலங்கையர் பலி

(கொழும்பு)

கட்டாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் பலியானதுடன் மற்றுமொரு இலங்கையர் காயமடைந்துள்ளார்.

திருகோணமலை - மூதூரின் நடுத்தீவைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சம்மூன் மஹீப் (வயது- 42) என்பவரே விபத்தில் பலியாகியுள்ளார்.

காயமடைந்தவர் கட்டாரிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் ஜனாஸா நல்லடக்கம் கட்டாரில் இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக உறவினர்கள் தெரிவித்துள்ளார்.

# கறவைப் பசுக்கள் இறக்குமதி ஆஸி. பசுக்களுக்கு கிராக்கி

(கொழும்பு)

பால்மாவுக்குப்பதிலாக புதிய பால்நுகர்வை ஊக்குவிப்பதற்காக இவ்வருடம் மேலும் 10,000 பசுக்கள் இறக்குமதி செய்யப் படும். இதன்மூலம் பசுக்களின் எண்ணிக்கையை 10,000 இலிருந்து 20,000ஆக அதிகரிப்பதற்கு தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.

ஏற்கெனவே அவுஸ்ரேலியாவிலிருந்து 500 பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 1500 பசுக்கள் இரு மாதங்களுக்குள் இறக்குமதி செய்யப்படும் எனவும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் தலைவர் லகஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

பால்மா இறக்குமதிக்காக இலங்கை வருடாந்தம் 4000 மில்லியன் டொலர்களை செலவிடுவதாகவும் பசுக்களை இறக்குமதி செய்வது நீண்டகால அடிப்படையில் செலவு குறைவானது என தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இவ்வருடம் இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களின் மொத்தப் பெறுமதி நிர்ணயிக்கப்படவில்லை எனவும் அவை பல மில்லியன் பெறுமதியானவையாக இருக்கும் எனவும் அவர் தெரவித்தார். மலையகத்தில் பசுக்களின் பராமரிப்பு உணவு என்பனவற்றுக்காக மில்லியன் கணக்கான ரூபா செலவிடப்படவுள்ளது.

கர்ப்பம் தரித்த பசுக்களும் இறக்குமதி செய்யப்படும் எனவும் இதன்மூலம் பசுக்களின் எண்ணிக்கை மற்றும் பால் உற்பத்தி அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நீண்டு செல்கிறது குற்றவாளிகள் பட்டியல்

கணனி மயமாக்க ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டின சகல குற்றவாளிகளினதும் தரவுகள் கணனி மயப்படுத்தப்பட உள்ளதாக பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களின் பெயர்கள், கைவிரல் அடையாளங்கள், புகைப்படங்கள், முகவரிகள் உள்ளிட்ட பல்வேறு தரவுகள் உள்ளடக்கப்பட உளளன. பல்வேறு குற்றச் செயலகளில் ஈடுபட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான குற்றவாளிகளின் பெயர் விபரங்கள் இவ்வாறு கணனி மயப்படுத்தப்பட உள்ளன. குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் தரவுகள் கணனி மயப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2015 ஆம் ஆண்டளவில் நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களை 90 வீதத்தினால் குறைப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விடைத்தாள் திருத்தும் மையத்தில் இடமாற்றப் பட்டியல் வாசிப்பு

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)


வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றப்பட்டியல் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்ற க.பொ.த.உயர்தர மாணவர்களின் விடைத்தாள் திருத்துகின்ற மையத்தில் வைத்து வாசிக்கப்பட்டுள்ளமை முறையற்ற செயற்பாடு என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கண்டனம் தொடர்பாக சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த இடமாற்றப்பட்டியல் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள ஒருவரே வாசித்துள்ளதாக அறிகின்றோம். வலிகாமம் வலயத்தில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் விபரம் முழுமைப்படுத்தப்படாத நிலையில் அந்த இடமாற்றப் பட்டியலை எவ்வாறு ஒரு ஆசிரியர் பரீட்சை விடைத்தாள் திருத்தும் மையத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். இது சட்டவிரோதமானதும், தண்டனைக்குரியதுமாகும்.

வலிகாமம் வலய இடமாற்றத்தில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், கல்வி அபிவிருத்திக்குழுவும், அதிபர்கள் சங்கமும், அதிபர்களும், ஆசிரியர்களும், கல்வியாளர்களும் சுட்டிக்காட்டிவரும் இவ்வேளையில், இவ்வாறு முறைகேடாக பட்டியலை வெளியிடுவது கண்டிக்கப்படவேண்டியதும், குறித்த நபர்கள் மீது சட்ட நடிவடிக்கை எடுக்கவேண்டியதுமாகும்.

இது தொடர்பில் வலிகாமம் பிரதேச அதிபர்களும், ஆசிரியர்களும் கடும் விசனமடைந்துள்ள அதேவேளை, வலிகாமம் வலயத்திற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்கவும் தயாராகி வருகின்றனர். இது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், வடமாகாண ஆளுநருக்கும், பரீட்சை ஆணையாளருக்கும் பலரும் முறையிட்டவண்ணமுள்ளனர். வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இங்கு இல்லாத நிலையில் இதுபோன்ற துஸ்பிரயோகங்கள் நடைபெறுவது எமது மாணவர்களின் கல்வி மற்றும் பரீட்சை என்பவற்றைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. இதை விட பரீட்சை விடைத்தாள் திருத்தும் மையத்தில் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் கண்ணீர் விட்டு அழுததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரமர் சங்கமம்



"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும்" இந்தப் பழமொழியை வைத்துக் கனநேரம் சிந்தித்தேன். அது என்ன அப்புடி தொட்டிலில் ஏற்படுகிறது சுடுகாடுவரை வருகிதெண்டு.

அநேகமாக தொடடில்ல கிடக்கேக்க அடிக்கடி அழுதழுது அம்மாட்டைப் பாலைக் குடிப்பதும் கொஞ்சத் தாலை அதைக் கறக்கிறதும்: கிடந்த கிடேல்ல மலம் கழிப்பதும் தான நிகழும்.

உதாரணத்துக்கு வயதுபோயிட்டால் திரும்பவும் குழந்தையாகி கிடந்த கிடேயில எல்லாம் நடப்பதை நினைத்துப் பாத்தன். எனக்கு அது அவ்வளவாக ஏறகத் தக்கதாகப் படேல்ல.

இது ஒப்பீட்டளவில் சொல்லப்பட்ட பழமொழியாகத்தான் தெரிஞ்சுது. 'ஐஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' "சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது" என்னும் பழமொழியளைப் போல.

'இளமையிற் கல' என்பதைப் போன்றும் இளம் வயதில் செய்கின்ற சில விளையாட்டு செய்கைகள் வயதுக்கு வந்தும் தொடர்வதைக் குறிக்கும் வகையாக இந்தப் பழமொழி இருக்க வேண்டும்.

அந்த நாளேல சினிமா ரசிகர்கள் மத்தியில் இருவேறு கோஷ்டிகள் இருந்தனர். ஒரு பகுதி எம்.ஜி.ஆர் என்றால் இன்னொரு பகுதி சிவாஜி ஆதரவாளர்களாக வலம் வந்தனர்.

ஒருகால கட்டத்தில் இரண்டு பகுதிக்கும் ஏற்படும் முரண்பாடு வெட்டுக் கொத்து கொலை வரையும் சென்றுள்ளன. அதனை விட எம்.ஜி. ஆரின் புதுப்படம் வந்தால் சுவரொட்டிகள் முக்கிய சந்திகளில் விளம்பரத்துக்காக ஒட்டுவார்கள்.

சிவாஜி ரசிகர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும் அப்பொழுதெல்லாம் வீதிகளில் மாடுகள் சாணங்களைத் தாராளமாக போடும் அதனை எடுத்து அந்தச் சுவரொட்டிகளுக்கு சாணக அபிஷேகம் செய்து வைப்பார்கள்.

அதுபோல சிவாஜி படச்சுவரொட்டிகளுக்கு எம்.ஜி.ஆர் ரசிகர்கள் அபி ஷேகம் செய்வார்கள் பிற்காலத்தில் அந்தச் செயற்பாடுகள் செயலிழந்து போயிற்று.

இப்ப என்னெண்டா எதுக்கெடுத்தாலும் கழிவு ஓயில் வீச்சு நடத்தும் கலாசாரம் புதிதாகக் தொடங்கியுள்ளது. இதனையும் தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும் என்று குறிப்பிடக் கூடியதாக வளர்ந்து வருகிறது.

யாழ். போதனாவைத்தியசாலை வைத்தியர் சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி ஜெயக்குமாரது கந்தர் மட வீட்டுக்கு கழிவு ஓயில் வீசிய செய்திகள் பரபரப்பாக வெளிவந்தது.

அதனைத் தொடர்ந்து உடுவில் பிரதேச சபை அலுவலகம் திறப்பு விழா நிகழ்த்த இருந்த சமயம் முதல்நாள் இரவு சென்ற கோஷ்டியினர் காவலாளிகளை துரத்தி அடித்து விட்டு கழிவு ஓயில் வீச்சைக் கட்டடத்திற்கு நடத்தி இருந்தனர்.

கடைசியாக கடந்த 7ஆம் திகதி ஞாயிறன்று சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொள்ள யாழ் வந்திருந்த முன்னிலை சோசலிசக் கட்சியின் சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் வாகனத்துக்கு நல்லூரில் வைத்து கழிவு ஓயில் வீசப்பட்டதாகச் செய்திகள் வந்தன.

முன்னையப் போல இப்பொழுதெல்லாம் தெருக்களில் மாடுகளின் சாணம் எடுப்பது கஷ்டமாகி விட்டது. மாடு வளர்ப்புகளும் குறைந்து விட்டன. இப்ப வாகனங்கள் தானேகூட. அதால கழிவு ஓயில் வேண்டியளவு எடுக்கக் கூடியதாக இருக்கிறதல்லவா?

என்ன இருந்தாலும் பரம்பரை பழக்கம் இன்னமும் தொட்டிலாட்டம் மனிதனிடம் தொடர்ந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதா இருக்கெல்லே என்ன நான் சொல்லுறே...

## நீர் வற்றுதலைத் தடுக்க குளத்தில் நன்னீர் மீன்குஞ்சுகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக குளங்கள் முழுமையாக நீர்வற்றிய நிலையில் காணப்பட்டமையினால் அக்குளங்களில் இருந்த மீன்கள் அனைத்தும் இறந்த நிலையில் காணப்பட்டன. இதனால் நன்னீர் மீன் பிடிப்பாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்நிலையில் வவுனியா நகர நன்னீர் மீன் பிடிப்பாளர் கூட்டுறவு சங்கத்தினர் வவுனியா குளத்தில் 50,000 மீன்குஞ்சுகளை விட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நகர நன்னீர் மீன் பிடிப்பாளர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் காஜா முகைதீன், கடந்த காலத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியினால் குளத்தில் சரியான முறையில் நீர். முகாமைத்துவம் கையாளப்படாமையினால் அனைத்து மீன்குஞ்சுகளும் இறந்துபோயிருந்தன.

இந்நிலையில் எமது கூட்டுறவுச்சங் கத்தினால் மீன்பிடிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் இராஜாங்கனையில் இருந்து 50,000 மீன்குஞ்சு களைக் கொள்வனவு செய்து இக்குளத்தில் விட்டுள்ளோம் என்றார். (160)

## பௌர்ணமி தினம்

(யாழ்ப்பாணம்)

சத்திய சாயி சேவா நிலையத்தின் பௌர்ணமி தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி இடம் பெற வுள்ளது.

இதில் காலை 8.30 மணிக்கு கொடியேற்றம் வேதபாராயணம், காயத்திரி மந்திரம், பஜனை என்பன இடம்பெறவுள்ளன. தொடர்ந்து சாயியின் அனுபவங்கள் என்னும் பொருளில் ஆனந்தராஜா சொற்பொழிவாற்றவுள்ளார்.

## மருந்துப் பொருட்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் தீவக வைத்தியசாலைகளுக்கு மருந்துப்பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரனினால் (கமல்) தீவக பிரதேசசபை தவிசாளருக்கு அம்மருந்துகள் வழங்கப்பட்டன. அம்மருந்துப் பொருட்கள் அண்மையில் ஊர்காவற்துறை ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் ஊர்காவற்துறை பிரதேசசபை தவிசாளருமான ம.ஜெயகாந்தனால் ஊர்காவற்துறை வைத்திய அதிகாரி அருண புண்ணியமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் ஊர்காவற்துறை பிரதேசசபையின் பதில் தவிசாளர் பேலிக்ஸ் அல்பேட் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## முரசின் இன்றைய பலன்

(29.10.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி. நட்சத்திரம் அச்சுவினி பின்னிரவு 3.32 வரை. சித்தயோகம் திதி: பூரணை பின்னிரவு 1.45 வரை. இராகுகாலம் 7.33 - 9.03 வரை. சுபநேரம் 12.03 - 1.33 வரை. எமகண்டம் 10.33 - 12.03 வரை, குளிகன் காலம் 1.33 - 3.03 வரை. பூரணை விரதம் - போயா தினம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நண்பர்களிடம் மனக்குறை பகிர்வீர்கள். புதிய நம்பிக்கை. பணவரவு அதிகரிக்கும். தம்பதியர் அன்யோன்யம். கடன் தீரும். போக்குவரத்தில் கவனம். புத்திரரால் பெருமை. |
| ரிஷபம் | எதிர்பார்த்த வெற்றி. தொழில் சிறந்து, அதிக பணவரவு. குடும்ப தேவைகள் நிறைவேறும். உறவினர் வருகை மகிழ்ச்சி. சமூகத்தில் உயர்மதிப்பு. நம்பிக்கை வளரும். |
| மிதுனம் | முன்னேறும் வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். வியத்தகு செயல்கள் நடக்கும். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமாணம். தாராள பணவரவு. பதவி உயர்வு பெற அனுகூலம். |
| கடகம் | இரக்கம், கருணைத்தன்மை. உதவி பெற்றவர் வாழ்த்துவர். தொழிலில் அனுகூலம். பணவரவு திருப்தி. தாயின் தேவை பூர்த்தி. பொறுமையால் அதிர்ஷ்டம் தேடி வரும். |
| சிம்மம் | பயணங்களால் பலன். கலைத்துறையினர் மேன்மை. புதிய பணி வரும். கடன் வசூலாகும். தொழிலில் எச்சரிக்கை. எதிர்பாரார்த சந்திப்பு. வரவும் செலவும் சமம். உறவினர் உதவி. |
| கன்னி | பணிகளில் இலக்கை எய்துவீர்கள். மகிழ்ச்சி கூடும். தொழில் வளர்ச்சியும், நற்பலனும். உபரி பணவருமானம். உண்டு மகிழ்வீர்கள். நண்பர் சந்திப்பு. புத்திரரால் நற்செய்தி. |
| துலாம் | பாராட்டும் பரிசுகளும் வரும். கூடுதல் உழைப்பால் எதிர்பார்த்த அனுகூலம். செலவுக்குத் தேவையான பணவரவு. எதிர்பாராத உதவி கிடைக்கும். உணவில் எச்சரிக்கை. பிரார்த்தனை. |
| விருச்சிகம் | புதிய வேகமும், விவேகமும் இருக்கும். புதிய வாய்ப்புக்கள், நன்மை. பணவரவு கூடும். குழந்தைகளின் படிப்பு, எதிர்காலத்துக்கு முடிவுவெடுப்பீர்கள். ம்மான், மைத்துனரால் உதவி. |
| தனுசு | புத்திசாலித்தன செயலால் அனுகூலம். பாராட்டு வரும். தொழில் முன்னேற்றம். அதிக இலாபம். சேமிப்பும் அதிகரிக்கும். இல்லறத்துணை ஆலோசனை. சமூக நிகழ்வுகளில் ஆர்வம். |
| மகரம் | பிரச்சினையாக இருந்தவைக்கு தீர்வு கிடைக்கும். புத்துணர்வு. தொழில் முன்னேற்றம். உபரி பணவருமானம். தாய்வழி உறவினரால் நன்மை. விலை உயர்ந்த பொருள் வாங்குவீர்கள். |
| கும்பம் | எதிர்ப்புகளை வெல்லும் உத்வேகம். நண்பர், உறவினருக்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சி. உபரி பணவரவு. பிணி தீரும். அரசு வகையில் உதவி. வழக்குகளில் அனுகூல பலன். |
| மீனம் | சந்தோசம் தரும் நிகழ்வுகள். புத்துணர்வும், செயல்திறனும் வளரும். கூடுதல் பணி. தேவையான பணவசதி. பொருள் வாங்குவீர்கள். வாகன பயணத்தில் கவனம். தெய்வ வழிபாடு. |

# பிரசாத் சிறப்பான பந்து வீச்சு

# நெல்லியடி மத்திய ம.வி. அபார வெற்றி



(நெல்லியடி)

பிரசாத்தின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் மாபெரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி அபார வெற்றிபெற்றது.

வடமராட்சி கல்வி வலய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் ஒன்றை ஆண்டு தோறும் நடத்தும் முகமாக வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அணிக்கும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்குமிடையிலான மாபெரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. இரண்டு போட்டிகளைக் கொண்ட தொடராக அமைந்தது.

அந்த வகையில் இப்போட்டித் தொடரின் முதலாவது போட்டி நேற்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. மழை காரணமாக பத்து ஓவர்கள் குறைக்கப்பட்டு 40 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடத்தப்பட்டது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிரம்பரக் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத்தீர்மானித்தது.பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய சிரம்பரக் கல்லூரி அணிக்கு ஆரம்பம் முதலே அதிர்ச்சி அளிக்கும்வகையில் பிரசாத்தின் பந்து வீச்சு அமைந்தது. பிரசாத்தின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய சிதரம்பரக் கல்லூரி அணி மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சிம்பரக் கல்லூரி அணி 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இறுதி வரை ஆட்டமிழக்காது பாஸ்கரன் மிகவும் பொறுமையாக 15 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் டிசோக்ராஜ் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரசாத் ஆறு ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 59 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 14. 4 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டினலன் 33 ஓட்டங்களையும், துவாரகன் 19 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் நிதர்சன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இதன் மூலம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பிரசாத்தும், சிறந்த துடுப்பாட்ட வீரராக டினலனும், சிறந்து பந்து வீச்சாளராக பிரசாத்தும், சிறந்த களத்தடுப்பாளராக டிசோக்ராஜும், சிறந்த சகலதுறை வீரராக டினலனும் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் வடமராட்சி கல்வி வலயத்தைச்சேர்ந்த உயர்அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (12)

## பிரெஞ் சூப்பர் சீரிஸ் பட்மின்ரன்

# இறுதியில் சாய்னா



(பாரிஸ்)

பிரெஞ் சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் சாய்னா தகுதி பெற்றுள்ளார்.

பிரெஞ் சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் போட்டி பாரிஸ் நகரில் நடந்து வருகிறது.

இதில் காலிறுதியில் தாய்லாந்து வீராங்கனை ராட்சானோக்கை 22-20, 22-20 என்ற நேர் செட்டில் வீழ்த்திய இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியில் ஜேர்மனியின் ஜுலியா ஸ்செங்குடன் மோதினார். இதில் முதல் செட்டில் ஜுலியா கடுமையான சவால் கொடுத்தார்.

இருவரும் சளைக்காமல் நீண்ட ஷாட்டுகளை அடித்து இரசிகர்களுக்கு விருந்து படைத்தனர். ஒரு கட்டத்தில் 12-15 என்று பின்தங்கிய சாய்னா அதன் பிறகு 19-19 என்று சமனுக்கு கொண்டு வந்தார். அதன் தொடர்ச்சியாக அடுத்த இரு கேம்களை வென்று அந்த செட்டை சாய்னா தனதாக்கினார்.

ஆனால், 2ஆவது செட்டில் சாய்னா தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்தினார். அத்துடன் எதிராளி மிகவும் பதற்றமடைந்ததால் இந்த செட்டை சாய்னா மிக எளிதாக கைப்பற்றி விட்டார். 36 நிமிடங்கள் நடந்த ஆட்டத்தின் முடிவில் சாய்னா 21-19, 21-8 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

சிறப்பான ஆட்டத்திறனுடன் இருப்பதால் இப்போட்டியில் கிண்ணம் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என வெற்றியின் பின் சாய்னா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தொடரை வெல்வோம்

(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான கிரிக்கெட் தொடரை கைப்பற்றிக் கொள்வோம் என நியூஸிலாந்தின் சகல துறை ஆட்டக்காரர் ஜேக்கப் ஓரம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஜேக்கப் ஓரம் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்றுவிப்பாளராக அவ்வணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் போன்ட் நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்தப் போட்டித் தொடர் இடம்பெறுகின்றது. இதில் எமது அனைத்து வீரர்களும் சிறப்பான துறையில் தமது திறமைகளை வெளிப்படுத்துவார்கள் என நம்புகின்றேன் எனவும் ஜெக்கப் ஓரம் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் உதவிப் பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையின் அணிக்கு எதிரான போட்டிகளை சிறப்பாக எதிர்கொள்ள இவரது பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படுகின்றது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# இறுதிப் போட்டியில் செரீனா, ஷரபோவா

(இஸ்தான்புல்)

பெண்கள் சம்பியன்ஷின் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு செரீனா வில்லியம், மரிய ஷரபோவா ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர். பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடந்து வருகிறது.

லீக் முடிவில் முதல் வீராங்கனை விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்), 2ஆம் நிலை வீராங்கனை மரிய ஷரபோவா (ரஷ்யா), 3ஆம் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), 4ஆம் நிலை வீராங்கனை அக்னீஸ்கா ராத்வன்ஸ்கா (போலந்து) ஆகியோர் அரையிறுதி சுற்றை எட்டியிருந்தனர்.

இந்த நிலையில் அரையிறுதிஆட்டங்கள் நேற்று முன்தினம் நடந்தன. இதில், முதலாவது அரையிறுதியில் செரீனா வில்லியம்ஸ் 6-2, 6-1 என்ற நேர் செட்டில் ராத்வன்ஸ்காவை பந்தாடினார். முந்தைய நாள் இத்தாலியின் சாரா எர்ரானிக்கு எதிரான கடைசி லீக்கில் 31/2 மணி நேரம் போராடி வென்ற ராத்வன்ஸ்கா, ஓய்வின்றி தொடர்ந்து மறுநாளே இந்த ஆட்டத்தில் விளையாடியதால் சோர்வடைந்து போய்விட்டார்.

மற்றொரு அரையிறுதியில் மரிய ஷரபோவா 6-4, 6-2 என்ற நேர் செட்டில் அஸரென்காவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இன்று நடக்கும் இறுதிப்போட்டியில் செரீனா-ஷரபோவா சந்திக்கிறார்கள்.

கோப்பையை வெல்லும் வாய்ப்பை இழந்தாலும், அரையிறுதி வரை முன்னேறியதன் மூலம் அஸரென்கா முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். இந்த ஆண்டு இறுதிவரை அவரே முதல் இடத்தில் நீடிப்பார்.

# சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளம் பயன்படுத்துவதில் தவறில்லை



(புதுடில்லி)

இங்கிலாந்து டெஸ்ட் தொடரின் போது, எமது அணிக்கு ஏற்ற சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை அது நியாயமான வியயம் தான் என வீரர் ஹோலி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய சுற்றுப்பயணங்களின் போது அங்கு நடந்த பயிற்சி ஆட்டங்களில் எமக்கு துடுப்பாட்டத்திற்குச் சாதகமான ஆடுகளங்கள் (பிட்ச்) வழங்கப்பட்டன. ஆனால் முக்கியமான டெஸ்ட் போட்டிகளுக்கு திடீரென வேகப்பந்து வீச்சு எடுபடும் வகையிலான ஆடுகளங்கள் பயன்படுத்தப்பட்டன. அவர்கள் (இங்கிலாந்து, அவுஸ்ரேலியா) எங்களுக்கு எதிரான போட்டியில் நேர்மையுடன் இருக்க விரும்பியிருந்தால், டெஸ்ட் போட்டிக்கு எந்த மாதிரியான ஆடுகளம் பயன்படுத்தப்பட்டதோ அதே போன்ற ஆடுகளத்தை பயிற்சி போட்டிக்கும் தந்திருக்க வேண்டும். வெளிநாட்டு அணிகளுக்குப் பயிற்சிக்கு குறைந்த காலமே இருக்கும் என்பதை அறிந்தும், அவர்கள் இவ்வாறு வெவ்வேறு ஆடுகளங்களை தந்தனர். இப்போது இங்கிலாந்து வீரர்கள் இந்திய மண்ணில் சுழற்பந்துவீச்சுக்கு ஏற்ற ஆடுகளங்களில் விளையாட வேண்டி உள்ளது. நாங்கள் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன், இந்தியாவில் நிறைய போட்டிகளில் விளையாடி இருக்கிறார். சுழற்பந்து வீச்சை அடித்து ஓட்டங்கள் குவிப்பதில் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக உள்ளார். இதனால் சிறப்பாக விளையாட வேண்டிய நெருக்கடி அவருக்கு இருக்கும். இங்கிலாந்து சீனியர் வீரர்கள் இங்குள்ள நிலைமையை புரிந்து செயற்படுவார்கள் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் என்னைக் கேட்டால், அது எளிதான விடயம் அல்ல. இதற்கு, ஐக்கிய அரபு எமிரேட்டில் சமீபத்தில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை உதாரணமாக சொல்ல விரும்புகிறேன். அந்த போட்டியில் பந்து அதிகமாக சுழன்று செல்லவில்லை. என்றாலும் தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மலை சமாளிக்க முடியாமல் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் வீழ்ந்தனர் எனவும் தெரிவித்தார்.

# தேசிய மட்டத்தில் பதக்கம் அம்மாவுக்கு சமர்ப்பணம்

## சாதனை வீராங்கனை லேகாஜினி கமலநாதன்

(வவுனியா)

தேசிய மட்டப் போட்டியில் நான் சாதிப்பதற்குப் பக்க பலமாக இருந்தவர் எனது தாயாரே. அந்த வகையில் இந்த வெற்றியை எனது அம்மாவுக்கு சமர்ப்பிக்கின்றேன் என வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வீராங்கனை லேகாஜினி கமலநாதன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியின் 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான தடை தாண்டல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற லேகாஜினி கமலநாதன் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கும், வட மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவரின் சாதனை குறித்து எமது செய்தியாளர் தயாளபாலன், லேகாஜினியிடம் கருத்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2008ஆம் ஆண்டு தொடக்கம் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றேன்.

2010ஆம் ஆண்டு விளையாட்டுத்துறையில் ஈடுபடத் தொடங்கினேன். விளையாட்டிலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகம் எனக்கு இருந்தது.

நான் சிறுமியாக இருக்கும்போதே எனது தந்தை இறந்துவிட்டார். இச்சம்பவத்தின் மூலம்விளையாட்டில் நான் தீவிரமாக ஈடுபட முடியாத நிலை ஏற்படுமோ என எண்ணினேன். இதனால் போட்டிகளில் பங்குபற்றுவதை தவிர்க்கவும் செய்தேன்.

ஆனால், விளையாட்டின் மீது எனக்கிருந்த ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் புரிந்து கொண்ட என் அம்மா எனக்கு ஊக்கமளித்தார். எனது பயிற்சிகளை எதுவித தடையுமின்றி சிறப்பாக மேற்கொள்வதற்கு பக்க பலமாக இருந்தவரும் என் அம்மாவே.

அடுத்ததாக நான் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் பயிற்சியை நிறுத்துமளவிற்கு தடைகளும், பிரச்சினைகளும் ஏற்பட்டன. அதனைச் சரிசெய்து எனது திறமைகளை ஊக்குவித்து, எனது பயிற்சியை சிறப்பாகத் தடையின்றித் தொடங்குவதற்கு வழி சமைத்தவர் எமது பாடசாலை அதிபர் செல்வி உமா இராசையா அவர்கள்.


தொடர்ந்து பயிற்சிகளை சிறப்பாக மேற்கொண்டு பல பதக்கங்களை வென்று வந்தேன். 2010ஆம் ஆண்டு 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் நிறச் சான்றிதழைப் பெற்றேன். இந்தக் காலப் பகுதியில் எமது பயிற்றுவிப்பாளர் த. பத்மசொரூபன் ஆசிரியரின் இடமாற்றம் ஏற்பட்டது. இதன் காரணமாக 2011ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் எனது திறமையை சரியான முறையில் வெளிப்படுத்த முடியவில்லை.

இருந்தபோதிலும் எமது அதிபர் செல்வி உமா இராசையாவின் முயற்சியால் மீண்டும் எமது பயிற்றுவிப்பாளர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார். அதன் பின் தடையின்றி மீண்டும் பயிற்சியை மேற்கொள்ள முடிந்தது.

2010ஆம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் போது எனக்குள் இருந்த முழுத் திறனையும் இனங்கண்டார். தடை தாண்டல் போட்டியில் சாதிக்கக் கூடிய ஆற்றல் எனக்கு இருக்கின்றது என்பதையும், அது தொடர்பான பூரணமான விளக்கங்களையும், பயிற்சிகளையும் வழங்கியவர் எனது பயிற்றுவிப்பாளர் பத்மசொரூபன் அவர்கள்.

அத்துடன் இந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றவிருந்த எனக்கு கற்றல் செயற்பாடுகள் தடங்கலின்றி மேற்கொள்வதற்கு ஏற்றவாறு பயிற்சிகளை வழங்கினார்.

இவர்களின் ஒட்டுமொத்த ஒத்துழைப்பு, ஊக்குவிப்பு ஆகியனவே இந்தாண்டு நான் தேசிய மட்டப் போட்டியில் சாதிக்க துணைபுரிந்தது. தேசிய மட்டத்தில் பதக்கம் வென்றது என்றுமே சிறப்பானது. பல கஷ்டங்களைத் தாண்டி என் விளையாட்டுக்கு ஊக்கமளித்த என் தாயாருக்கு இந்தப் பதக்கத்தை பெருமையுடன் அர்ப்பணிப்பதே மிகவும் பொருத்தமாக இருக்கும்.



என் வெற்றிக்கு வழிசமைத்த எமது கல்லூரி அதிபர், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தைச் சேர்ந்த பழைய மாணவர் சங்கம், பயிற்றுநர், சக மாணவிகள் என அனைவருக்கும் இவ்விடத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

எதிர்வரும் ஆண்டுகளிலும் தேசிய மட்டப் போட்டிகளில் சாதிக்க வேண்டும் என்ற பெரு விருப்பு எனக்கு இருக்கின்றது. எனக்கான தொழில் நுட்பத்துடன் கூடிய பயிற்சிகள் வழங்கப்படும் பட்சத்தில் தேசிய மட்டத்தில் பல சாதனைகளை என்னால் ஏற்படுத்த முடியும்.





எமது மாகாணத்திற்கான வளப்பற்றாக்குறைகள் போதியளவில் கிடைக்கப் பெறுவது குறைவே.

எனவே, இதனை விளையாட்டு ஆர்வலர்கள், வர்த்தக நிறுவனங்களைச் சேர்ந்தோர் வழங்க முன்வந்தால் நிச்சயம் என் போன்ற பல வீர, வீராங்கனைகள் சாதனை படைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (93)

# அரையிறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

விபுலானந்தர் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினால் விபுலானந்த ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டப் போட்டிகள் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேற்படி சுற்றுப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியினை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது.

இப்போட்டியில், முதல் சுற்றினை 10:8 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி வெற்றிபெற்றது.

இரண்டாம் சுற்றில் உடுவில் மகளிர் கல்லூரி 11:5 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. மூன்றாவது சுற்றினை 8:4 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி கைப்பற்றியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிச் சுற்றில் முன்னிலை பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி அணி 21:12 என்ற புள்ளி அடிப்படையில் புள்ளிகளை பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

# சென். பற்றிக்ஸ் வெற்றி

புனிதர்களின் போர் என்று அழைக்கப்படும் சென். ஹென்றியரசர் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான கால்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் ஆட்டம் முடியும் வரை எந்தவித கோல்களினையும் அடிக்கவில்லை. இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் அடித்து, ஆட்டத்தினை சமநிலைப்படுத்தினர்.

18 வயதுப் பிரிவு ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஒரு கோலினை அடித்தது. பதில் கோல் எதனையும் ஹென்றியரசர் கல்லூரியினால் போட முடியவில்லை.

20 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகத் தெரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட கால்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப்பிடித்துக்கொண்ட புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத் தெரிவு அணியினர் விருந்தினர்களுடன் காட்சி தருவதைக் காணலாம். (93)



# இளையராஜாவின் ஜாஸ் வே

**- விக்கி -**

மங்கிய ஒளி வெளிச்சத்தில் வெள்ளைக்கார தம்பதிகள் கைகோர்த்துக் கொண்டு பின்னணியில் ஒலிக்கும் இனிமையான பியானோ இசையுடன் சேர்ந்து ஆடுவதைப் பல ஆங்கிலத் திரைப்படங்களில் பார்த்திருக்கலாம். அந்த நடனத்துக்கும், இசைக்கும் "வோல்ட்ஸ்" (waltz) என்று பெயர். இந்த இசை ஐரோப்பாவின் கிராமிய இசைகளில் வேர்கொண்டது. கிராமிய இசையிலிருந்து மெல்ல மெல்ல செறிவாகி மேற்கத்தேய சாஸ்திரிய இசையில் முக்கியமான பங்கு வகிக்க ஆரம்பித்தது. ஃப்ரான்ஸ் ஷுபர்ட், பிரெட்ரிக் சாபின், ஸ்ட்ரோஸ் போன்ற மேதைகள் வோல்ட்ஸ் இசையில் அருமையான பல படைப்புகளைக் கொடுத்துள்ளார்கள்.

ஸ்ட்ரோஸின் "ப்ளூ டேன்யுப்" எனும் படைப்பை மேற்கத்தேய இசையின் மிகப் பிரபலமான வோல்ட்ஸ் எனலாம். தில்லானா மோகனாம்பாள் திரைப்படத்தில், சிக்கில் சண்முகசுந்தரம் நாதஸ்வரத்தில் வாசிக்கும் மாண்டு ராகத்தில் அமைந்த நோட்ஸ் பகுதியை சுத்தமான வோல்ட்ஸ் எனலாம். (இது மதுரை மணி ஐயர் தன் கச்சேரிகளில் மிகவும் பிரபலப்படுத்திய ஒரு துக்கடா. மறுபடியும் கே.வி.மகாதேவன் இத்திரைப்படத்தில் உபயோகித்தார்.) எண்பதுகளில் வெளியாகி இன்றும் பலருக்கு விருப்பப்பாடலாக இருக்கும் எம்.எஸ்.வி இசையமைத்த "மன்னிக்க மாட்டாயா" என்கிற பாடலும், எல்.ஆர்.ஈஸ்வரியை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்ற "காதோடுதான் நான் பாடுவேன்" என்கிற பாடலும் வோல்ட்ஸ் இசையை எளிதில் இனங்காட்டும் பாடல்கள்.

## மனோதர்ம இசை

இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் ஜாஸ் இசை மேலெழுந்து வரத்தொடங்கியது. மேதமை கொண்ட பல ஜாஸ் இசைக்கலைஞர்களால், எழுதிக்கொடுக்கப்பட்ட இசைத் தொகுப்புகளை வெறுமனே திரும்ப வாசிக்காமல், அவற்றைத் தங்கள் படைப்பூக்கத்தின் மூலம்



மேலும் பல மாற்றங்கள் செய்து செழுமைப்படுத்தினார்கள். இதுதான் இந்திய இசைக்கும், ஜாஸ் இசைக்குமான ஒரு முக்கியமான பொதுப்பண்பு. இரண்டிலுமே மனோதர்மம் மூலம் இசைக்கலைஞரால் ஒரு கட்டுக்குள் அடங்கும் பல புதிய மாற்றங்களை spontaneous ஆக மேடையில் தரமுடியும். பொதுவெளியில் பிரபலமாக இருந்த வோல்ட்ஸ் இசை, ஜாஸ் இசைக்கலைஞர்களால் சிறு சிறு அழகிய மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டது.

வோல்ட்ஸ் இசை பெரும்பாலும் "1-2-3", "1-2-3" என்ற தாளத்தில் சற்று மெதுவான தாளகதியில் வாசிக்கப்படும் ஒன்று. இந்தத் தாளகதியின் வேகத்தைக் கூட்டி, அதில் இரண்டாவது, மூன்றாவது அட்ஷரங்களில் ஒரு சிறு அசைவை ஏற்படுத்தும்போது, அதில் அழகான ஜாஸ் சேர்க்கை உருவாகிறது. இதுதான் "ஜாஸ் வோல்ட்ஸ்" என்றழைக்கப்படுகிறது. (ஜாஸ் வோல்ட்ஸின் நவீனத்தன்மையைக் குறிப்பிடும் வகையில் இது 'Modern waltz' என்றும் சொல்லப்படுகிறது.)

ஜோன் கோல்ட்ரேன் இன்று ஜாஸ் இசையின் முக்கியமான இசைக்கலைஞர்களில் ஒருவராக, ஜாஸ் இசையின் பல உச்சங்களைத் தொட்ட கலைஞராகப் பார்க்கப்படுகிறார். 'The sound of music' என்ற பிரபலமான திரைப்படத்தின் 'My favourite things' என்ற பிரபலமான பாடலை ஜாஸ் வோல்ட்ஸ் வடிவில் ஜோன் கோல்ட்ரேன் வாசித்திருக்கிறார். இது ஜாஸ் வோல்ட்ஸ் இசையின் முக்கியமான படைப்பாக இன்றும் கருதப்படுகிறது.

புதிதாக அறிமுகப்படுத்திக் கொள்பவர்களுக்கான ஒரு நல்ல ஜாஸ் வோல்ட்ஸ் இசைஇருக்கிறது. பர்ட் பாகரேக் என்ற இசையமைப்பாளர், Butch Cassidy and the Sundance முனை என்ற பிரபலமான திரைப்படத்தின் ஒரு காட்சிக்குப் பின்னணியாக அமைத்திருக்கும் இசை இது. South American Getaway எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இசைத்துணுக்கு இளையராஜாவின் இசையமைப்புக்கு மிக அருகில் இருப்பதை உணர முடியும். ஜாஸ் வோல்ட்ஸ் பாணியில் அமைக்கப்பட்ட Mr.Bojangles என்ற பாடலும் மிக முக்கியமான ஒன்று.

## படைப்பூக்க சாதனை

ஜாஸ் வோல்ட்ஸைக் குறித்து அறிமுகம் கிடைத்தபின் இந்தியப் பின்னணியில் யோசித்துப் பாருங்கள். இதை இந்தியத் திரையிசையில் எப்படி உபயோகிக்க முடியும்? மதுக்கோப்பைகளும், சிகரெட் புகையும் நிறைந்திருக்கும் ஒரு இரவு விடுதியின் பின்னணி இசையாகப் பயன்படுத்தலாம். அல்லது பர்ட் பாகரேக் பயன்படுத்தியிருப்பது போல, ஒரு நீளமான, உற்சாகமான, நகர் சார்ந்த காட்சிக்குப் பின்னணி இசையாகப் பயன்படுத்தலாம். ஆனால் சர்வ சாதாரணமாக ஒரு நாயகன் - நாயகியின் காதல் பாடலுக்கான இசையாகவோ, ஒரு அம்மா தன் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருக்கும் பாட்டுக்காகவோ பயன்படுத்தமுடியும் என்று யோசிக்க முடிகிறதா? சரி, அதைவிட்டுவிடுவோம். இந்த ஜாஸ் வோல்ட்ஸை சாஸ்த்ரீய இந்திய இசைக்கருவியான தபேலாவில் கொண்டுவரமுடியும் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா? இவையெல்லாமும் கூட சாத்தியம் என நம்மவர் ஒருவருக்கு தோன்றியிருக்கிறது.

இளையராஜா பல மேற்கத்தேய இசை வகைகளை இந்திய இசையில் அறிமுகப்படுத்தியிருக்கிறார் என்பது அவர் இசையைப் பின்தொடரும் பலருக்கும் தெரிந்தொரு விஷயம். ஆனால் அந்த இசை வகையை அப்படியே பிரதியெடுத்துத் தமிழில் கொடுக்காமல், தன்னுடைய திரையிசை வடிவுக்குள் நாம் முற்றிலும் யூகிக்கமுடியாத இடத்தில், மிகவும் பொருத்தமாக உபயோகித்திருப்பார். உதாரணமாக ப்ரியங்கா என்ற திரைப்படத்தில் வரும் "வனக்குயிலே குயில் தரும் இசையே" என்ற பாடலைச் சொல்லலாம். அப்பாடல் இந்திய ராகமான லலிதாவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் தாளமோ ரெக்கே எனப்படும் ஜமைக்கா இசையில் வேர்கொண்டது. கர்னாடக சங்கீதப் பரிபாஷையில் சொல்வதானால் ரெக்கே இசையின் அரை இடங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்து இசைக்கப்படும் தாள அமைப்பை இந்த பாடலில் துல்லியமாகக் கேட்க முடிகிறது. நாம் அதை கவனித்துப் பிரித்துப் பிரித்துப் பார்த்தாலேயொழிய லலிதாவோ, ரெக்கேவோ நமக்குத் தெரியாது. அதில் நமக்குத் தெரிவது இளையராஜாவின் ஒரு தேர்ந்த இனிமையான திரையிசைப்பாடல் மட்டுமே.

அந்த வகையில் அவர் நமக்கு ஒரு மேற்கத்தேய இசைவகையை அறிமுகப்படுத்துவதோடு, இந்திய இசைக்குள் அதன் புதிய சாத்தியங்களையும் முன்வைக்கிறார். அதனால் தான் அவருடைய இசைப் படைப்புகள், "பிரதியெடுப்பவை"யாக இல்லாமல், படைப்பூக்கத்தோடு கூடிய பல இசைச் சாதனைகளாக இருக்கின்றன.

## தில் தில் தில் மனதில்

"தில் தில் தில் மனதில்" என்ற "மெல்லத் திறந்தது கதவு" படத்தில் இடம்பெற்ற பாடலை கவனியுங்கள். பாடலின் துவக்க இசையாக வரும் கிட்டாரில் இசைக்கப்படுபவை, ஜாஸ் இசையின் தனித்துவமான Major 7th கார்ட்கள். அந்த கிடாரின் தாளகதியைச் சற்று வேகப்படுத்தி கற்பனை செய்து பார்க்கும்போதுதான் அது உண்மையில் ஜாஸ் வோல்ட்ஸ் என்றே புரிகிறது. அதைத் தொடர்ந்து பல்லவி ஆரம்பிக்கும்போது வாசிக்கப்படும் தபேலாவில் ஜாஸ் வோல்ட்ஸின் அசையும் தாளகதி வாசிக்கப்படுகிறது. இதன் மூலம் ஜாஸ் வோல்ட்ஸுக்கு ஒரு அழுத்தமான இந்திய வண்ணம் கிடைக்கிறது.

தபேலாவின் ஓட்டத்தைப் பிரதிபலிக்கும் பின்னணியில் கேட்கும் [illegible]ம் கிடார் மீட்டல்கள், இளையராஜாவின் ஜாஸ் வோல்ட்ஸ் கற்பனையைத் தெளிவாகக் காட்டுகின்றன. இந்தப் பாடல் முழுக்கவே ஜாஸ் வோல்ட்ஸ் தாளகதியில்தான் தபேலா இசைக்கப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிய தபேலாவில் ஜாஸ் வோல்ட்ஸ் மூலம் ஒரு முழுநீளத் திரையிசைப்பாடலை உருவாக்கிய முதல் இசையமைப்பாளர் இளையராஜாவே. (இதே பாடலின் சரணத்தில் இறுதி இரண்டு வரிகளில் அமைக்கப்பட்டிருக்கும் கார்ட்களையும் இங்கே குறிப்பிடவேண்டும். அவை வழக்கமான கார்ட் நகர்வுகள் இல்லை. அதில் இளையராஜா செய்திருக்கும் மாற்றம், மரபை மீறி, கற்பனைக்கெட்டாத புதுவகை கார்ட் நகர்வுகளைக் கொண்டுவருவதில் இளையராஜாவுக்கும், அவர் இசைக்குழுவினருக்கும் இருக்கும் ஆளுமையைக் காட்டுகின்றன.) 1980களிலேயே ஜாஸ் வோல்ட்ஸ் இசையில் தன்னுடைய மாற்றங்களைச் சேர்த்து பரிசோதனை செய்திருக்கிறார் இளையராஜா. அருமையான orchestration கொண்ட "கேள் தென்றலே" என்ற பாடல்தான் அது. மகேந்திரன் இயக்கிய "நெஞ்சத்தைக் கிள்ளாதே" என்ற படத்தில் இடம்பெற்றிருக்கிறது. பாடலின் தொடக்க இசையில் வரும் சேர்ந்திசை (choir), இரண்டாம் இடையிசையிலிருக்கும் ரொமாண்டிக் யுகத்தின் பாதிப்புகள் - இவையெல்லாம் இளையராஜாவின் மேற்கத்தேய செவ்வியல் இசை ஆளுமையைக் காட்டினாலும், பாடலின் தாள அமைப்புதான் தனித்து நிற்கிறது.

பாடல் முழுதும் ஆறு அட்ஷரங்கள் கொண்ட ஆவர்த்தனத்துடன் அமைக்கப்பெற்று அதில் இரண்டாம் பீட் மட்டும் ஒரு சிறு அசைவுடனும், பிற பகுதிகள் வழக்கமான வோல்ட்ஸாகவும் கேட்கக் கிடைக்கிறது. இரண்டாவது பீட்டுக்கு மட்டும் சின்கோபேஷன் (syncopation) கொடுத்தும், மூன்றாம் பீட்டின் ஸ்விங் அஞ்சவை மறைத்தும் உருவாக்கியிருக்கும் இந்த

> இப்போது நவீன நாடகங்களில் ஒளி உத்தி அற்புதமாகப் பயன்படுத்தப்படுகிறது. திரைபிம்பங்களுக்கோ ஒலி உத்தி மிக அற்புதமாகக் கையாளப்படுகிறது. இந்தக் கலையை மிகச் சரியாக உயர்த்திக் காட்டியவர் பண்ணைபுரத்து ராஜா அவர்கள்தான். இதில் அவர் செய்து காண்பித்த ஜாலவித்தைகள் அர்ச்சுனன் கை பாணங்களுக்கு நிகரானவை.
>
> – எழுத்தாளர் கி.ராஜநாராயணன்

தாளம் மிகவும் வித்தியாசமான ஒன்று. வழக்கமான ஜாஸ் வோல்ட்ஸ்களில் கூட இவை உபயோகப்படுத்தப்படுவதில்லை.

தொண்ணூறுகளில் வெளிவந்த ஒரு பாடலில் இப்படிப்பட்ட ஜாஸ் வோல்ட்ஸ் பயன்பாட்டைப் பார்க்க முடியும். அது "கானம் தென்பாண்டிக் காற்றோடு" என்ற இளையராஜாவே பாடிய பாடல். இப்பாடல் இடம்பெற்ற "கண்ணுக்கொரு வண்ணக்கிளி" என்ற திரைப்படம் வெளியாகவேயில்லை. ஹொலிவுட்டுக்கு அடுத்து அதிக அளவில் திரைப்படங்கள் தயாரிக்கப்படும் இந்தியச்சூழலில் இது சகஜமான ஒன்றுதான் என்றாலும், படம் வெளிவாரமல் போவதால் பல அரிய பாடல்கள் நம் கவனத்திலிருந்து தப்பிவிடுகின்றன என்பதும் வருத்தமளிக்கும் உண்மை.

கண்ணுக்கொரு வண்ணக்கிளி திரைப்படத்தின் பாடல்கள் நல்ல தரமான ஒலியில் குறுந்தகடாக வெளியிடப்பட்டதுதான் ஒரே ஆறுதல். இத்திரைப்படத்தின் அனைத்து பாடல்களுமே மிகச்சிறப்பானவை. குறிப்பாக இந்தப் பாடலில், இடையிசையில் வரும் கிட்டார் வாசிக்கப்பட்டிருக்கும் விதம் இளையராஜாவின் இசைக்குழுவில் வாசிக்கும் திரு.சதானந்தம் போன்ற இசைக்கலைஞர்களின் உயர்ந்த தரத்தைக் காட்டுகிறது. இவ்வளவு மென்மையாகவும், அதே சமயம் படுவேகமாகவும், acoustic கிட்டார் மீதான முழு




# வோல்ட்ஸ்

ஆளுமையுடனும் வாசிக்கப்பட்டிருக்கும் விதம் நம் மொத்த இந்தியத் திரையிசையிலேயே வெகு அரிதுதான்.

## நீதானே என் காதல் வேதம்

இளையராஜா தன் ஜாஸ் வோல்ட்ஸ் பாடல்களுக்கான தாளகதியை எந்த விதமான தாளக்கருவிகளை உபயோகித்து, எப்படி அமைக்கிறார் என்பதும் கவனிக்கப்படவேண்டிய விஷயம். முழுக்க எலெக்ட்ரோனிக் ட்ரம்ஸ் தாள அமைப்பில் இளையராஜா செய்திருக்கும் ஒரு நேரடியான ஜாஸ் வோல்ட்ஸை "நவோதயம்" என்ற தெலுங்குப் பாடலில் கேட்கலாம்.

முழுக்க தபேலாவால் ஆன ஜாஸ் வோல்ட்ஸையும், முழுக்க ட்ரம்ஸில் இசைக்கப்பட்ட மேற்கத்திய வகை ஜாஸ் வோல்ட்ஸையும் முன்பு பார்த்தோம். இரண்டையும் ஒன்று சேர்த்தும் ஒரு ஜாஸ் வோல்ட்ஸ் கதியை "தேவன் கோயில்" என்ற பாட்டில் அமைத்திருக்கிறார் இளையராஜா. தபேலா தாளகதியின் முதுகெலும்பாகவும், ட்ரம்மின் ஹை - ஹாட்ஸ் துடிப்பான கணக்கைத் தொடர்வதையும் கவனிக்கலாம்.

இந்தப் பாடலின் மெட்டை மட்டும் வாய்விட்டுச் சொல்லிப் பார்த்தால் இது வெகு சாதாரணமாகத் தெரிகிறது. ஆனால் இசைக்கருவிகளின் சேர்க்கைதான் இந்தப் பாடலை முழுக்க வேறொரு தளத்துக்கு நகர்த்துகின்றன. பாடலின் மெட்டு உருவாகும்போதே இசைக்கருவிகளையும் கற்பனை செய்துகொள்வதன் மூலம்தான் இப்படிப்பட்ட பாடல்களையே உருவாக்கமுடியும். ஆகவே, இளையராஜாவின் பாடல்களில் உபயோகிக்கப்பட்டிருக்கும் இசைக்கருவிகள், மெட்டுக்கான பிற்சேர்க்கைகளாக இல்லாமல், மெட்டு, குரல் ஆகியவற்றுக்கு சமமான இடத்தை வகிக்கின்றன.

"உன் பார்வையில்" என்ற பாடலும் இந்திய இசைக்கருவிகளில் உருவாக்கப்பட்ட ஜாஸ் வோல்ட்ஸுக்கு உதாரணம். ஹார்மோனியத்தால் நிறைக்கப்பட்டிருக்கும் பாடலின் ஆரம்ப இசை ஜாஸ் வோல்ட்ஸை கற்பனைக்கெட்டாத இடங்களில் பயன்படுத்துவதில் இளையராஜாவுக்கு இருக்கும் ஆளுமையைக் காட்டுகிறது. இப்பாடலின் ஹார்மோனியப் பகுதிகள் இளையராஜாவே வாசித்திருப்பவை. அருமையான ஹார்மோனியமும், தேர்ந்த குரல் வெளிப்பாடும் இப்பாடலின் இனிமையைப் பலமடங்கு கூட்டுகின்றன.

இதைப். போலவே கேட்பதற்கு இனிமையான பாடலுக்கான இன்னொரு உதாரணம், எண்பதுகளில் வெளிவந்த "கீதம் சங்கீதம்". மோகன ராகத்தின் அழகை சாதாரண ரசிகர்களும் புரிந்துகொள்ளும் வகையில் ஸ்வரங்களின் நகர்வை இப்பாடலில் அமைத்திருக்கிறார் இளையராஜா. இப்பாடலின் மெட்டை வாய்விட்டுப் பாடிப்பார்த்தால் அது எவ்வளவு சாஸ்த்ரீயமான, மரபான உணர்வைக் கையாள்கிறது எனப் புரியும்.


உதாரணமாக "நீ தானே என் காதல் வேதம்" எனும் இடத்தில் "பஸ தரி ஸ க ரிப கத பா ரீ ஸா" என தாட்டு வரிசைக்கொத்த ஸ்வர சஞ்சாரங்களை சாதாரணமாகக் கேட்கலாம். ஆனால் தாளகதியில் தரப்பட்டிருக்கும் ஜாஸ் வோல்ட்ஸ் அசைவின் காரணமாக, பாடல் மெட்டின் சாஸ்த்ரீய அமைப்பை மீறி ஒரு புத்துணர்வான நவீன வடிவம் கேட்பவருக்குக் கிடைக்கிறது.

சத்யா திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த "இங்கேயும், அங்கேயும்" என்ற வெளிவராத பாடலும் இதே போன்ற இசையமைப்புக்கு ஓர் உதாரணம். தாளகதியில் கொடுக்கப்பட்டிருக்கும் துள்ளல், பாடல் மெட்டின் சாஸ்திரிய உணர்வை முற்றாக மறைத்துவிடுகிறது. இதைப் பாடியிருப்பவர் இந்தியாவின் மிகச்சிறந்த பாடகிகளில் ஒருவரான லதா மங்கேஷ்கர். இந்தப் பாடல் திரைப்படத்தில் இடம்பெறாமல் போய் பலருக்கும் தெரியாமல் போனது ஒரு துரதிர்ஷ்டம்.

## சொர்க்கத்தின் வாசற்படி

1983 - இல் வெளிவந்த "பல்லவி அனுபல்லவி" என்ற கன்னடப்படம்தான் இன்று இந்திய அளவில் பிரபலமாக இருக்கும் மணிரத்னம், அனில் கபூர் என்ற இரண்டு கலைஞர்களுக்கும் முதல் படம். இதில் இளையராஜா அமைத்திருக்கும் "நகு எந்திதே" என்ற பாடல் பல்லவியிலும், ஆரம்ப இசையிலும், இளையராஜாவின் வழக்கமான ஜாஸ் வோல்ட்ஸ் என்றுதான் எண்ணவைக்கும். ஆனால் முதல் இடையிசையில் மேற்கத்தேய சாஸ்திரிய இசையின் சிறு பகுதியும், அதைத் தொடர்ந்து தென்னிந்திய நாட்டுப்புற இசையும் வந்துபோகின்றன. இரண்டாம் இடையிசையில் தர்பாரி ராக ஆலாபனையின் சிறுபகுதியும் வந்து போகிறது.

இவை அனைத்தையும் ஒன்று சேர்க்கும் ஜாஸ் வோல்ட்ஸ் தாளகதிதான், பாடல் பகுதிகள் துண்டு துண்டாகத் தனித்தனியாகத் தெரியாமல், ஒரு நிறைவான முழுமையைத் தருகிறது. இசைவகை வெவ்வேறாகப் பயணித்தாலும், பாடல் முழுதும் வந்துபோகும் அசையும் தாளகதி பாடலை ஒரே வடிவுக்குள் வைத்து அதன் ஜாஸ் வோல்ட்ஸ் தன்மையை அடிக்கோடிட்டு காட்டுகிறது. இளையராஜா தன்னுடைய பாடல்களின் அடிப்படை காலப்பிரமாணத்தில் பல தாளமாற்றங்களைச் செய்பவர் என்பது பெரும்பாலானோருக்குத் தெரியும். அவருடைய பெரும்பாலான பாடல்கள், மேற்கத்தேய வோல்ட்ஸின் இந்திய வடிவான "திஸ்ர கதியில்" அமைந்தவை. அவை வழக்கமான 3/4 என்ற தாளகதியில் "த கி ட, த கி ட" என எந்த அசைவும், சிங்கோபேஷனும் இல்லாமல் செல்லும். ஆனால் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், மரபை மீறி இப்பாடல்களின் தொடக்க இசை,



இடையிசைகளில் மேற்கத்தேய வடிவில் தாளப்பரிசோதனைகள் செய்யத் தவறுவதில்லை இளையராஜா.

"சொர்க்கத்தின் வாசற்படி" என்ற திஸ்ர ஏக தாளத்தில் அமைந்த பாடலைக் கேட்பவர்களுக்கு, தொடக்க இசை, இடையிசைகளில் மேற்கத்திய ஜாஸ் வோல்ட்ஸ் வந்துபோவது வியப்பாக இருக்கும். ஆனால் திஸ்ர ஏக தாளத்துக்கும், ஜாஸ் வோல்ட்ஸ் தாளகதிக்கும் இருக்கும் இணைத்தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு, மரபான திரைப்பாடலிலிருந்து ஜாஸ் வோல்ட்ஸ் வடிவத்துக்குள் அடிக்கடி கூடு விட்டுக் கூடு பாய்கிறார் இளையராஜா.

மாப்பிள்ளை திரைப்படத்தில் இடம்பெற்றிருக்கும் "என்னதான் சுகமோ" என்ற பாடலும் இதற்கு இன்னொரு உதாரணம். இடையிசையில் வரும் மேற்கத்திய ட்ரம்ஸின் ஜாஸ் வோல்ட்ஸ், சரணத்தின் இந்திய தபேலாவின் திஸ்ர ஏக தாளத்துக்குள் புல்லாங்குழல் மூலம் சர்வசாதாரணமாக நுழைந்துவிடுகிறது. அந்த உரையாடல் வெகு அநாயசமாகப் பாடலின் உணர்வையே வேறொரு தளத்துக்கு எடுத்துச் சென்றுவிடுகிறது.

## கண்ணனைக் காண்பாயா

அதைப் போல, முழுக்க ட்ரம்ஸ் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் பாடல்களில் ஜாஸ் வோல்ட்ஸுக்கும், மரபான வோல்ட்ஸ் வகைகளுக்குமாக மாறிச் செல்வதுபோல பாடலை அமைப்பது இளையராஜாவுக்கு ஒரு பெரிய விஷயமேயில்லை. ஃப்யுஷன் என்று வெளிப்படையாகக் காட்டி அமைக்கப்பட்டிருக்கும், "கண்ணனைக் காண்பாயா" பாட்டில் கர்நாடக சங்கீதத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகள் ரூபக தாளத்தில் அமைந்திருக்கின்றன. இடையிசையில் தாளம் ஒரு வித்தியசமான 3/4 தாளவகைக்கு மாறுகிறது. ஆனால் கேட்பவருக்கு அந்த வித்தியாசம் எதுவும் தெரியாத வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இளையராஜாவின் ஜாஸ் வோல்ட்ஸ் அமைப்புகள் எப்போதுமே வெளிப்படையாக இதுதான் ஜாஸ் வோல்ட்ஸ் என்று காட்டும்படி அமைவதில்லை. நாமாகத்தான் பாடலின் பல்வேறு அமைப்புகளிலிருந்து - இடையிசைகளிலிருந்தோ அல்லது பாட்டின் உணர்வையே மாற்றும் சரணத்திலிருந்தோ ஜாஸ் வோல்ட்ஸ் தாள கதியமைப்புக்களை கவனிக்கவேண்டும். உதாரணமாக திரைக்கதைப்படி ஒரு urban உணர்வு தேவைப்படும்போது, இதுபோன்ற Major 7th கார்ட்களால் நிரம்பும் ஜாஸ் வோல்ட்ஸ் அமைப்புகளால் பாட்டைக் கட்டமைக்கிறார் இளையராஜா.

நவீன உடையில் கிராமத்தில் வந்திறங்கும் கதாநாயகியை அறிமுகப்படுத்தும் பின்னணி இசையில் அவர் பயன்படுத்துவதும் ஜாஸ் வோல்ட்ஸ் துணுக்கே. அதே நாயகி இந்திய சிற்பங்களைக் கண்டு வியக்கையில் சடாலென வீணையில் ஒரு திருப்பத்தை தந்து திரையில் வரும் காட்சியை கண்ணில்லாதவரும் கூட உணரும் வகையான தருணங்கள் இவை.

இயல்பான இசை ஞானத்தோடு, எந்த வகை இசையை எங்கே பயன்படுத்தவேண்டும் என்ற அறிவும் கொண்டவராக இருக்கிறார் இளையராஜா. அதனால், அவர் ஜாஸ் வோல்ட்ஸ் இசைவகையை பாடல் கட்டமைப்புக்காகவும், கேட்பவருக்கு அலுப்பேற்படுத்தாமலிருக்கும் மாற்றமாகவும், திரைக்கதையை மேம்படுத்தும் கருவியாகவும் பயன்படுத்துகிறார்.

இந்தியாவின் பல்வேறு இசையமைப்பாளர்களை நான் ஓரளவே கேட்டிருக்கிறேன். ஆனால் நான் கேட்டவரை, இந்திய இசையமைப்பாளர்களில், இப்படிப்பட்ட ஜாஸ் வோல்ட்ஸ் தாள அமைப்பில் பாட்டை அமைத்தவர்கள் அரிது, அல்லது இல்லவே இல்லை என்று சொல்வேன். பெரும்பாலான தமிழர்களுக்கு ஜோன் கோல்ட்ரேனைப் பற்றியோ, அவர் ஜாஸ் வோல்ட்ஸை எப்படிக் கையாண்டார் என்றோ தெரியாது. அவர்களுக்கு பர்ட் பாகரேக் யாரென்று தெரியாது. Mr.Bojangles யாரோ ஒரு அந்நியர். அதிகம் அறியப்படாத Stranglers, Limp Twins பற்றியெல்லாம் சொல்லவே தேவையில்லை. ஆனால் அவர்கள் எல்லோருக்கும் பதிலாக ஒருவர் இருக்கிறார். அவர், இளையராஜா.

# பெண் உயரதிகாரிகளும் வீட்டு மனைவி மனப்பான்மையும்

சச்சின் அணித்தலைவராக இருந்தபோது அப்படித்தான் இருந்தார். அவர் பதினோரு பேரின் வேலையையும் தன் பாணியில்தானே செய்ய நினைத் தார். செயற்கையான பதற்றத்தை உருவாக்கினார். தோனி அமைதியாக சற்று விலகல் மனநிலையுடன் அணியை சுலபமாக கட்டுப்படுத்துகிறார். அவரது நிர்வாகத்தின் சிறப்பு கீழிருப்போர் அவரது அதிகாரத்தின் கடுமையை உணர்வதில்லை என்பது. சச்சினிடம் பெண்மை மிகுதி. தோனியிடம் ஆண் மையும் பெண்மையும் சமநிலையில் இருக்கிறது. இந்த சமநிலை குலையும் போது மனிதன் தன்னம்பிக்கையை அமைதியை இழக்கிறான், நெருக்கடிக் குள்ளாகி பலவீனமாகிறான்.

- ஆர். அபிலாஷ்

பொதுவாக பெண் உயரதிகாரிகள் கொடுங் கோலர்களாக இருப்பதாக உலகம் முழுக்க இன்று புகார் எழுகிறது. இதைப் பெண்களே ஏற்றுக் கொள்கிறார்கள். பெண்கள் பெண்மேலதிகாரி களிடத்து விட ஆண்களின் கீழ்தான் வேலை பார்க்க விரும்புகிறார்கள். பெண் உயரதிகாரிகள் பெண் ஊழியர்களை கீழ்த்தரமாய் நடத்துவதாய், தொடர்ந்து நெருக்கடி கொடுப்பதாய், அவர் களுக்கு பதவியுயர்வு மறுப்பதாய் சர்வதேச அள வில் செய்யப்பட்ட் ஆய்வுகள் கூறுகின்றன. இதற் கும் பெண்கள் பொதுவாக பரஸ்பரம் பகைமை பாராட்டுபவர்கள்ாய் இருப்பதற்கும் தொடர்பு உண்டா? இந்த கேள்விகளைப் பரிசீலிப்போம்.

பெண்கள் அரசியல் தலைமைக்கு வரும் போது எளிதில் சகிப்புத்தன்மை அற்றவர்களாக, பண் பற்றவர்களாக மாறிப்போவதற்கு இந்தியாவி லேயே ஜெயலலிதா, மம்தா பேனர்ஜி, மாயாவதி என உதாரணங்கள் பார்க்கிறோம். பெண்மேலதி காரிகளின் இந்த மனப்பான்மைக்கு ஆய்வாளர்கள் ராணித்தேனீ நோய்க்குறி (queen bee syndrome) என்று பெயரிட்டிருக்கிறார் கள். அதாவது இன்றும் வேலையிடங்களில் ஆண் களின் ஆதிக்கம் தான் அதிகம். பெண்கள் உயர் பதவிகளுக்கு வருவதற்கும் ஆண்களை சார்ந்தி ருக்க வேண்டி உள்ளது. அதனால் ஒரு பெண் உயரதிகாரி என்ற நிலைமைக்கு வருவதற்கு கடுமையாக போராட அதிக திறமை படைத்தவராக இருக்க வேண்டும். மேல்பதவியை எட்டியதும் அவர் களுக்கு பாதுகாப்பின்மை மனநிலை ஏற்படுகி றது. கீழிருக்கும் பிற பெண்களை அவர்கள் போட்டியாளர்களாக நினைக்கிறார்கள். அதனால் அவர்களை தொடர்ந்து மட்டம் தட்டி நெருக்கடி அளித்து வளர்ந்து விடாதபடி பார்த்துக் கொள்கிறார்கள். ‘கேலப்’ வாக்களிப்பு ஆய்வின் படி 32% பெண்கள் ஆண் மேலதிகாரியின் கீழ் வேலை பார்க்கத் தான் விரும்புகிறார்கள். பெண் மேலதிகாரிகளை ஏற் கும் பெண்கள் 23% தான். ஒரு தேனீக் கூட் டுக்குள் ஒரே ஒரு ராணித்தேனீயும் அதற்குக் கீழ் எண்ணற்ற அடிமை ஆண் தேனீக்களும் இருப்பது போல் தான் இருக்க வேண்டும் என பெண் உயரதிகாரிகள் நினைக்கிறார்கள். இது தான் சமூக உளவியலாளர்களின் கணிப்பு.

ஆனால் இந்தக் கணிப்பு, பிரச்சினையின் ஒரு பக்கத்தை மட்டுமே பரிசீலிக்கிறது. போட்டியும் பாதுகாப்பின்மையும் மனிதர்களைக் கசப்பானவர் களாக வன்மமானவர்களாக மாற்றும் என்பது உண்மை தான். ஆனால் பெண்ணதிகாரிகளின் சர்வாதிகார மனநிலைக்கு இது மட்டும் காரணம் அல்ல. முக்கியமாக இந்த கணிப்பு மேலோட்ட மாக இருக்கிறது. பிரச்சினை உண்மையில் ஆழமானது.


பொதுவாக தமக்கு கீழுள்ள பெண்களை ஊக்கு வித்து மேலே கொண்டு வரும் பெண் உயரதி காரிகளை பார்த்துள்ளேன். ஒரு குழுவை மிகத் திறமையாக வழிநடத்தும் பண்பாக பெண் உயர திகாரிகளும் சமமாக உள்ளார்கள். ஆக நாம் பெண் உயரதிகாரிகளின் பிரச்சினையை பொது மைப்படுத்தல் ஆகாது. சில பெண்கள் முழுக்க சகிப்புத் தன்மை அற்றவர்களாக வன்மம் மிக்க வ்ர்களாக நடக்கிறார்கள். இது பல அலுவ லகங்களில் நடக்கிறது. இன்னொரு புறம் பல பெண்கள் தமது சகிப்பின்மை, பதற்றத்தை கடந்து சிறந்த உயரதிகாரிகளாக உருவெடுக்கிறார்கள். இதுவும் நடக்கிறதுதான். முதலில் மோசமான உயரதிகாரிகளின் உளவியலை பார்ப்போம். இறுதியில் நல்ல பெண் உயர திகாரிகளின் மன-அமைப்பை அலசுவோம்.

இனி இந்த உலக சமூகத்துக்கு ஆண்மையும் பெண்மையும் மிகா தவர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களால் தான் மற்றொரு உலகப்போரை தடுக்கவும் மானுட அறத்தை தக்க வைக்கவும் முடியும்.

சகிப்பின்மை, பதற்றம், தொடர்ந்த வன்மம் ஆகியவை பொதுவான பெண் பண்புகளாக உள்ளன. இது உண்மையில் பெண்கள் பற்றிய பொதுபிம்பத்துக்கு மாறாக உள்ளது. பெண் பொறுமையின் உறைவிடம், அன்பின் உருவானவள் என்பதெல் லாம் ஆண்களின் பகற்கனவு மட்டுமே. பெண்கள் அவர்களுக்கான மனச்சிக்கல் களை கொண்டவர்கள். இவை தான் அவர்களின் வேலையிடத்து நடவடிக்கைகளுக்கு அடிப்பட்ை காரணம். சில உதாரணங்களைப் பார்ப்போம்.

பெண்கள் அழகான பெண்களை வெறுக்கிறார் கள். ஆண்கள் அழகான ஆண்களை வெறுப்பது குறைவு. ஆண்களுக்கு பொதுவாய் பிற ஆண் களின் அந்தஸ்தும் அதிகாரமும் தான் பொறா மையை வயிற்றெரிச்சலை கிளப்புகிறது. ஆனால் பெண்களுக்கு உடல் தோற்றம் பற்றின பிரக்ஞை அதிகம். அவர்களை உடல் அடையாளம் சஞ்சலப் படுத்துகிறது. பள்ளிகளில் கல்லூரிகளில் காதலை அதிக ஆவேசத்துடன் எதிர்ப்பவர்கள் பெண் ஆசிரி யர்களாகவே இருக்கிறார்கள். பெண்கள் நவீனமாய் ஆடையணிவதை பெண் ஆசிரியர்கள் உக்கிரமாய் எதிர்க்கிறார்கள்.

பெண்களின் இந்த ஒழுக்கப் பொலிஸ் மனநிலைக் கும் குடும்ப அமைப்புக்கும் ஒரு தொடர்புள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளாக பெண்கள் குடும்பத்தை நிர்வகிப்பவர்களாக இருந்து வந்துள்ளதால் குடும்ப கட்டமைப்பின் பாதுகாப்பு அவர்களுக்கு அதிமுக்கிய மாய் இருந்துள்ளது. வேட்டையாடியும் வேலை செய்தும் குடும்பத்துக்கு பொருள் கொண்டு வரும் ஆணை அவர்கள் தக்க வைத்தாக வேண்டும். பிற பெண்களை அவர்கள் போட்டியாளர்களாக நினைப்பது இங் கிருந்து தொடங்கி இருக்க வேண் டும். அடுத்து நவீன காலத்தில் பெண்கள் வேலைக்கு வரும் போது அவர்கள் வேலை இடத்தை ஒரு குடும்பமாக பாவிக்கிறார்கள். அங்கு அவர்கள் முழுமையான அதிகாரத்தை ஸ்தாபிக்க, கட்டுப் பாட்டை நிறுவ முயல்கிறார்கள்.



பொதுவாக பெண்களை வேலைக்கு வைப்பதில் உள்ள அனுகூலம் அவர்கள் எதையும் கவனத்துடன் அக்கறையும் சின்ன சின்ன தகவல்களில் ஆர்வம் காட்டி செய்வார்கள் என்பது. சுருக்கமாக அவர்கள் ஆண்களை விட பொறுப் பானவர்கள். இது உண்மையே. ஆனால் பிரச்சினை பெண்கள் இந்த சின்ன விசயங்களின் மீதான பொறுப்புணர்வை பல சமயங்களில் மிகைப் படுத்தி பதற்றமாகிறார்கள் என்பது. ஒழுங்கில்· சின்னதாய் குலைவு ஏற்பட்டாலே பெண்கள் மிகவும் பதற்றமாவார்கள். அனைத்தும் மிக ஒழுங்காக கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என எதிர் பார்பபார்கள் இதை ஒரு பள்ளிக கூட ஆசிரிய மனநிலை எனலாம்.

பொதுவாக பள்ளிக்கூட ஆசிரியர்கள் மாணவர் களை முழுக்க கட்டுப் படுத்தலாம் எனும் கற்பனை யோடு இருப்பார்கள். குழந்தை என்பது அவர் களுக்கு ஒரு இயந்திரம். அதை தொடர்ந்து முறுக்கேற்றி சரி பார்த்துக் கொண்டே இருப்பார்கள். பல ஆசிரியர்கள் வகுப்புகளில் கட்டுப் பாட்டை இழந்து கத்துவது, மாணவர்களை பெருங்குற்றம் இழைத்தது போன்று தண்டிப்பது எதற்கென்று பார்த்தோமானால் ஒரு சின்ன விசயமாக இருக்கும். பெண்கள் மேலதிகாரியானதும் இந்த ‘பள்ளி ஆசிரியர் மனநிலையை’ அலுவலகத்துக்கு கொண்டு வருவார்கள்.

இப்படியான பெண்கள் சின்ன சின்ன ஒழுக்கப் பிசகுகள் ஒரு வேலையின் பெரிய இலக்கை பாதிப்பதில்லை என்பதை உணர்வதில்லை. வேலை யிடத்தில் தவறு நேர்வது இயல்புதான். பல மாதிரியான மனிதர்கள் ஒரு வேலைக்குழுவில் இருப்பார்கள். அவர்கள் இயந்திரத்தனமாக துல்லியமாக இயங்க வைப்பது சாத்தியமல்ல. அவரவர் கோணலுடன் தனித்துவ பாணியுடன் வேலை பார்த்தாலும் இறுதியில் இலக்கை எப்படியும் எட்டிவிட முடியும் என்ற உண்மையை ஏற்பதில்லை. வேலைககாரி பெருக்கி விட்டுப் போன தரையை மீண்டும் ஒருமுறை பெருக்கி திருப்தி அடையும் வீட்டு மனைவி போல் அவர்கள் அனைத்து வேலைகளை தம்மால் மட்டுமே சரியாக செய்ய முடியும் என விடாப்பிடியாய் நம்புகிறார்கள். இது ஒரு அடிப்படையான உளவியல்/ உயிரியல் பிரச்சினை.

பெண்கள் உயரதிகாரிகளாக இருக்க தகுதியா னவர்களா என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை. ஒரு ஊழியனாக நான் ஆண்களின் கீழ் வேலை பார்க்க விரும்புவேன் என்றாலும் நான் ஒரு நிறு வனம் நடத்தினால் நிர்வாகப் பொறுப்பை ஒரு பெண்ணை நம்பித் தான் ஒப்படைப்பேன். தொண் ணூறு சதவீதம் பெண்கள் கறாராக அக்கறையாக எந்த வேலையையும் செய்து முடிக்கக் கூடியவர் கள். ஆக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு உள்ளதா என யோசிக்க வேண்டி உள்ளது.

ஒரு கலாசார அளவில் பெண்கள் குடும்பப் பொறுப்புகளில் இருந்து மெல்ல மெல்ல விலகி சமூகப் பொறுப்புகளை ஏற்பவர்களாக மாறும் போது அவர்கள் மேற்சொன்ன பள்ளி ஆசிரியர் மனநிலையில் இருந்து விலகக் கூடும். தமக்குத் தொழிலில் போட்டி பெண்கள் அல்ல ஆண்கள் தாம் எனும் முடிவுக்கு அவர்கள் வரக் கூடும். நிஜமான பெண் விடுதலை என்றால் பெண்கள் ஆண்களிடம் இருந்து விடுபடுவதல்ல; பெண்கள் தம் மிகுதியான ‘பெண்மை’ மனநிலையில் இருந்து கொஞ்சம் வெளியேறி கொஞ்சம் ஆண்மையை வரிப்பது தான்.· இங்கிருந்து நாம் ஒரு உளவியல் தீர்வுக்கு செல்வோம்.

பெண்மை என்பது மனநிலை மற்றும் பௌதிக மாக பெண்கள் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. ‘குடும்ப மனைவி மனப்பான்மை’ பல ஆண்களிடம் இருப்பதை காண்கிறோம். சச்சின் அணித்தலை வராக இருந்தபோது அப்படித்தான் இருந்தார். அவர் பதினொரு பேரின் வேலையையும் தன் பாணியில், தானே செய்ய நினைத்தார். செயற்கையான பதற்றத்தை உருவாக்கினார். தோனி அமைதியாக சற்று விலகல் மனநிலை யுடன் அணியை சுலபமாக கட்டுப்படுத்துகிறார்.

(மிகுதி 17ஆம் பக்கம்)

# “திவிநெகும” திட்டத்தின் கீழ் விதைகள் விநியோகம்



(வேலணை)

செழிப்பானதொரு வீட்டுத் தோட்டத்தின் உரிமையாளராகுங்கள் வாழ்வின் எழுச்சியுடன் நீங்களும் சேருங்கள் என்ற தொனிப்பொருளில் மகிந்தசிந்தனையின் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) வீட்டுத் தோட்டச் செய்கையின் நான்காம் கட்ட விதைகள் மற்றும் பயிர்கள் பயிரிடும் ஆரம்ப நிகழ்வு வேலணையில் இடம் பெற்றது.

வேலணை அல்லைப்பிட்டியில் வேலணை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வேலணை பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திசநாயகம் மீரா தலைமையில் பயிர்கள் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவித்த வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈ.பி.டி.பியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா (போல்) எமது வீட்டுத் தோட்டத்தில் இருந்து காய்கறிகளைப் பறிக்கும் பொழுது எவ்வளவு சந்தோசமாக இருக்கும், இங்கு வழங்கப்படும் விதைகளை சரியான முறையில் பயன்படுத்தி வாழ்வாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர் சி.கார்த்திகேசன் வேலணை பிரதேச சபை உறுப்பினர்களும் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், வேலணை கமநல நிலையத்தின் பொரும்பாகப் பணிப்பாளர், அத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும், வேலணை பிரதேச சபை அல்லைப்பிட்டி உப அலுவலகப் பொறுப்பதிகாரி கிருஷ்ணராசா மற்றும் அல்லைப்பிட்டி கிராம அலுவலர் சி.இரத்தினேஸ்வரன் ஆகியோரும் மக்களும் கலந்து கொண்டனர்.

# தொலைபேசி கம்பங்கள் வீதி புனரமைப்புக்கு இடையூறு

## அகற்றித்தருமாறு மக்கள் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா தோணிக்கல் லக்சபானா வீதி நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்க திட்டமிட்டுள்ள நிலையில் அவ் வீதியில் உள்ள தொலைபேசிக் கம்பங்களை அகற்றித் தருமாறு நாம் பிரதேச சபையினூடாக பல தடவைகள் தெலைத்தொடர்பு வவுனியா அலுவலகத்திற்கு எழுத்துமூலம் தெரிவித்துள்ளோம். எனினும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் வீதியைச் செப்பனிட முடியாதுள்ளது. இந்நிலை தெடருமானால் மக்களை அணிதிரட்டி தொலைத்தொடர்பு நிலையத்திற்கு முன்னால் போராட்டம் நடத்த வேண்டியேற்படும் என வவுனியா தெற்கு பிரதேச சபையின் உபதலைவர் ரவி தெரிவித்தார்.

நிதி ஒதுக்கப்பட்டும் நீண்ட நாட்களாக வீதி திருத்தம் செய்யப்படாமை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

பல முரண்பாடுகளுக்குப் பின்னர் இவ் வீதியை செப்பனிட நாம் நிதி கோரிக்கை விடுத்து நெல்சிப் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் வீதியை அகலமாக்கிச் செப்பனிட வேண்டியுள்ளதால் தொலைத்தொடர்பு கம்பங்களை அகற்றி தருமாறு எமது சபையின் சார்பில் பல தடவை கடிதம் அனுப்பியுள்ளோம். எனினும் அதனை தொலைத்தொடர்பு சபை செயற்படுத்தாமையினால் நாம் சிரமத்திற்கு முகம் கொடுத்து வருகின்றோம். அத்துடன் மழை காலம் ஆரம்பித்துள்ளமையினாலும் வீதியை செப்பனிடுவதற்கு தாமதம் ஏற்படலாம் எனவும் தெரிவித்தார்.

(160)

# கொள்ளை முயற்சி முறியடிப்பு

(திருநெல்வேலி)

சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக வங்கியிலிருந்து எடுத்துவரப்பட்ட 10 இலட்சம் ரூபா பணம் கொள்ளையர்களின் கையில் சிக்காமல் மயிரிழையில் காப்பாறப்பட்டுள்து. நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் கோயிலடியில் கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்வியங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ந.சிவகுமார் திருநெல்வேலி பல்கலைக்கழக மக்கள் வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபா பணத்தை சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக எடுத்துக் கொண்டு சைக்கிளில் நாயன்மார்கட்டில் உள்ள சமுர்த்தி வங்கிக்கு வந்துள்ளார்.

இவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் முகத்தை மூடி தலைக்கவசம் அணிந்து வந்த கெள்ளையர்களில் ஒருவன் திடீரென்று சைக்கிளில் வந்து கொண்டிருந்த முகாமையாளரைத் தள்ளி நிலத்தில் வீழ்த்தி விட்டுப் பணப்பையைப் பறிக்க முயன்றுள்ளான். இருந்தும் கொள்ளையனைக் கட்டிப் பிடித்துக் கொண்ட முகாமையாளர் கள்ளன் கள்ளன் என கூக்குரலிட்டுள்ளார்.

சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் ஓடிவரவே முகாமையாளரின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்ட கொள்ளையன் மோட்டார் சைக்கிளில் தயாராக இருந்த மற்றைய கொள்ளையனுடன் தப்பி ஓடியுள்ளான். பணப்பையும் காப்பாற்றப்பட்டது.

இது சம்பந்தமாக கோப்பாய் மற்றும் யாழ்ப்பாண பொலிஸாரிடம் முறையிடப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(137)

# கட்டுரைப் போட்டி முடிவுகள்

தொடர்ச்சி....

புகைப்பொருள் எதிர்ப்புதினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் பாடசாலை மாணவர்களிடையேயும், திறந்த பிரிவாகவும் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டுரை திறந்த போட்டி·

கி.சுகிர்தனா சாவகச்சேரி, கி.ஜெயம் யாழ்ப்பாணம், ம.மாலாதேவி அளவெட்டி மத்தி, சு.வத்சலா தெல்லிப்பளை, ந.துஷ்யந்தி சண்டிலிப்பாய், கு.கலாவதி சித்தன்கேணி, க.விமலாசினி கொடிகாமம், ந.லோஜனவனிதை சாவகச்சேரி, ர.தனுயன் மானிப்பாய், ச.வளர்மதி சுன்னாகம், கி.சரண்யா தாவடி வடக்கு, ஆ.காந்திமதி சுன்னாகம்.

(முற்றும்)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் புடைவை நிறுவனத்திற்கு அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை. தொடர்புகளுக்கு: சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ், 41, பெரிய கடை வீதி யாழ்ப்பாணம்.

---

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் டி.எம்.ஐ.கனேடியன் நிறுவனம் 6 மாத கால பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பை வழங்கவுள்ளது. பயிற்சியின் போது சம்பளமும் பயிற்சியின் முடிவில் 35 ஆயிரம் ரூபா சம்பபளமாக வழங்கப்படும். முதல் 25 பேருக்கு முதலிடம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 151 8168, 077 2151014, 021 721 2045.

---

One World Innovage கம்பனிக்கு வேலையாட்கள் தேவை. 6 மாத கால பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் போது 8 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை பெறமுடியும். பயிற்சியின் நிறைவில் 35,000 - 45,000 வரை பெறமுடியும். தொடர்புகளுக்கு: 077 621 9536, 077 030 8484.

---

சரவணா ரெக்ஸ் வியாபார நிலையத்திற்கு புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண் பணியாளர்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: சரவணா ரெக்ஸ், 770, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

---

மன்னார், கிளிநொச்சி, அனுராதபுரம் போன்ற கிளைகளுக்கு சிங்களம் கதைக்கக்கூடிய ஆண்கள் 30 பேர் உடனடியாகத் தேவை. 3 - மாத பயிற்சிக்காலத்தில் 8000 ரூபா ஆரம்ப வேதனத்துடன் 15,000 - 20, 000 ரூபா இடையில். பயிற்சியின் பின் 30,000 ரூபாவுக்கு மேல் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், தங்குமிட வசதி இலவசம். தொடர்புகளுக்கு 077 977 5614.

---

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் கிளையைக் கொண்டியங்கும் பிரபல நிறுவனத்திற்கு விரிவுரையாளர், அலுவலக சுத்திகரிப்பாளர், உதவியாளர் பதவிகளுக்கு தகுதியானவர்கள் தேவை. தொடர்புகளுக்கு: British College Of Higher Studies. யாழ்ப்பாணம் - 021 222 4550, 077 773 0074, வவுனியா 024 324 5287, 077 758 5913.

---

தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு சாவகச்சேரி மற்றும் முல்லைத்தீவு கிளைகளுக்கு வியாபார முகாமையாளர், கிளை முகாமையாளர் தேவைப்படுகின்றனர். வியாபார முகாமையாளர் பதவிக்கு 25,000 ரூபா தொடக்கம் 50,000 ரூபா வரையிலும் கிளை முகாமையாளர் பதவிக்கு 10 ஆயிரம் ரூபா தொடக்கம் 25 ஆயிரம் ரூபா வரை தகைமை அடிப்படையிலும் அனுபவ அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 279 0327.

---

ஆனைக்கோட்டையில் உள்ள வெதுப்பகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு: 077 253 6162.

---

தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் மருந்தக உதவியாளர் (ஆண் மட்டும்) தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 579, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 077 464 0770

---

உள்ளூர் சிற்றுண்டி வகைகளை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றுக்கு 22 வயதுக்கு மேற்பட்டவரும், மோட்டார் சைக்கிளுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரும் க.பொ.த சாதாரணதரம் படித்திருப்பவர்கள் விற்பனை முகாமையாளர் பதவிக்கு தேவைப்படுகின்றனர். முன் அனுபவம் மேலதிக தகைமைகளாக கருதப்படுவதோடு, மாதாந்த சம்பளத்துடன் ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு, SOND, இல 60, அரசடி வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 021 222 6700.

# மஞ்சுளாமீது நம்பிக்கை இல்லை; விரைவில் வருகிறது பிரேரணை

(கொழும்பு)

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவியில் பணியாற்றுவதற்கு மஞ்சுள திலகரட்ணவிற்கு தகுதி இல்லை என்று அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ணவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வர ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியின் சில இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். நீதிமன்ற சேவையின் அதிகாரி என்ற போதிலும் மஞ்சுள திலகரட்ண ஓர் அரசாங்க உத்தியோகத்தர் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்கத்திற்கு விரோதமாகச் செயற்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவியை வகிக்கும் அளவிற்கு மஞ்சுளவிற்கு தகுதி கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். நம்பிக்கையில்லாப் பி.ரேரணைக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களை திரட்டும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதவியைப் பறிக்க சூழ்ச்சி; அரசுமீது ஜே.வி.பி. பாய்ச்சல்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பணிநீக்கம் செய்ய அரசாங்கம் சூழ்ச்சித் திட்டங்களை வகுத்து வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக உச்ச நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் அரசாங்கத்திற்கு சாதகமாக அமையவில்லை. இதன் காரணமாக பிரதம நீதியரசரை பணிநீக்கம் செய்ய அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை பிரயோகித்து பிரதம நீதியரசரை ஆளும் கட்சியின் பக்கம் சாய்த்து கொள்ளல் அல்லது அழுத்தங்களின் ஊடாக பணிநீக்கம் செய்தல் ஆகிய இரண்டு வழிகளில் சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த சூழ்ச்சித் திட்டம் தோல்வியடைந்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பிரதம நீதியரசரை பணிநீக்கம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நீதி நேர்மையாக செயற்படும் எந்தவொரு நிறுவனமும் பணிகளை செவ்வனே மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை என அனுரகுமார திஸாநாயக்க அரசு மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

# புதிய தேர்தல் முறைமை; எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் எதிர்க் கட்சிகள் சிறந்த ஜனநாயக சூழலை அனுபவிக்க முடியும் என்பதுடன், நாட்டில் பலமான ஒரு எதிர்க்கட்சியையும் வளர்த்தெடுக்க முடியும் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்களின் ஆதரவை முழுமையாகப் பெற்றவர்களே அரசாங்கத்தின் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படுவர்.

அதேபோல அரசியல் ரீதியாக பலமான எதிர்க்கட்சி ஒன்று உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காற்றுடன் மழை; மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மத்திய வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலை, யாழ்ப்பாணத்தில் இருந்து 600 கிலோமீற்றர் தொலைவில் வலுப்பெற்றுள்ளதாகத் , தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வடக்கு கிழக்கு மற்றும் வடகிழக்கு கடற்பரப்பு கடும் காற்று மற்றும் மழையுடன் காணப்படும் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# மண்சரிவினால் அவலம்

(கொழும்பு)

மண்திட்டு சரிந்து வீட்டின் மீது விழுந்ததில் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்ட அத்தனகல பகுதியை சேர்ந்த தாயொருவர் ஐந்து நாட்களுக்கு பின்னர் மரணமடைந்துள்ளார். அந்த சம்பவத்தில் அவரது 10 வயது மகள் பலியான நிலையிலேயே அவரது தாயும் மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த தாய் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் மரணமடைந்ததாக வைத்திய சாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். அத்தனகல-அலவல எனுமிடத்தில் இந்த மண்சரிவு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வவுனியா நகர வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா நகரத்தில் உள்ள பிரதான வீதிகளான முதலாம் குறுக்குத்தெரு மற்றும் இரண்டாம் குறுக்குதெரு ஆகிய வீதிகள் உட்பட கந்தசுவாமி கோவில் வீதி என்பன மிகவும் மோசமாகப் பாதிப்படைந்து மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்றதாக இல்லைமையினால் அவற்றைத் திருத்தம் செய்து தருமாறு நகர சபையிடம் வவுனியா வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் வர்த்தகர்கள் தெரிவிக்கையில்;

வவுனியா வட மாகாணத்தின் முக்கியத்துவம் மிக்கதான வர்த்தக நகரமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் நகரத்தில் மக்கள் பிரவேசித்தவுடனேயே மிகவும் மோசமான வீதிகளே காணப்படுகின்றன. இதன் காரணமாக மக்கள் சுகமான போக்குவரத்தைச் செய்ய முடியாதிருப்பதுடன் வர்த்தகமும் பாதிப்படைகின்றது. பல ஆண்டுகளாக நாம் வவுனியா நகரசபையிடம் இவ் வீதிகளைத் திருத்தம் செய்து தருமாறு கோரி வருகின்றோம் எனினும் அவர்கள் இது தொடர்பில் செவிசாய்க்கவில்லை

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளமையினால் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் இவ் வீதியைப் பயன்படுத்துவதற்கு சிரமம் கொள்வதனால் வவுனியா நகரசபை உடன கவனம் செலுத்த வேண்டும்.

இது தொடர்பில் வவுனியா நகரசபையின் உறுப்பினர் எஸ். இராஜேஸ்வரனிடம் கேட்ட போது,

பல மாதங்களுக்கு முன்னர் இவ் வீதிகளைத் திருத்தம் செய்வதற்கு கெயார் திட்டத்தின் மூலம் அனுமதி கிடைத்துள்ளதாக சபைக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அவற்றிலும் 27 வீதிகளுக்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பில் நகரசபை சார்பிலும் சபையின் நிர்வாகத்தினர் சார்பிலும் நடவடிக்கைகள் முன்னேடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளமையினால் வீதி திருத்த வேலைகளைச் செய்வதிலும் தடங்கல்கள் ஏற்படும். எனினும் வர்த்தகர்களும் பல தடவை இவ் வீதிகள் தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தனர் எனவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா நகரசபையின் உபதலைவர் எம்.எம்.ரதனிடம் கேட்ட போது,

வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்தமை தொடர்பில் தெரியவில்லை.

எனினும் இவ் வீதிகளுக்கான ஒப்பந்தம் கெயார் நிறுவனத்துடன் செய்யப்பட்டு ஒப்பந்தகாரர்களிடம் வேலைகளும் ஒப்படைக்கப்பட்டிருந் தது. அத்துடன் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிப்பதாக இருந்த நிலை யில் தற்போது மழை ஆரம்பித்துள்ளமையினால் வேலைகளுக்கு தடங்கல் எற்படும் எனவும் தெரிவித்தார். (160)

# அசுரவேகத்தில் வாகனங்கள்; பயணிகள்பாடு திண்டாட்டம்

(புதுக்குடியிருப்பு)

த்ற்போதைய மழைநேரங்களிலும் வீதிகளில் பயணிக்கும் அரச, மற்றும் தனியார் பேருந்துகள், கனரகவாகனங்கள் பல விதிக்கப்பட்ட வேகத்தையும் தாண்டிப் பயணிப்பதாக பாதசாரிகள் மற்றும் பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடா நாட்டில் பலவீதிகள் புனரமைக்கப்பட்டு காபெற் இடப்பட்ட நிலையில், அதில் வேகமாகப்பயணிக்கும் வாகனங்கள் அவசர தேவையின் பொருட்டு வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் விபத்துக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படுமெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட வாகனசாரதிகள் இம்மழைக் காலத்தில் தங்கள் பொறுப்பை உணர்ந்து, வாகனங்களைச் செலுத்துவதோடு, பேர்க்குவரத்து கண்காணிப்பு பொலிஸாரும் இது குறித்து கவனத்தில் கொள்ளவேண்டுமென சமூகநலன் சார்ந்தோர் மற்றும் பொது மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (138)



யாழ். நகரப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற செபமாலைப் பவனியில் பல்லாயிரக்கணக்காக கிறிஸ்தவர்கள் பங்குபற்றியிருந்தனர். செபமாலை மாதாவின் திருச்சொருப பவனியுடன் கிறிஸ்தவர்கள் பேரணியாக வருவதைக் காணலாம். (படம்: ராஜ்)

பந்தியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.

ஜப்பான் அடிக்கடி இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் நாடு. சுனாமி என்பது ஜப்பானியச் சொல். அண்மையில் சுமாத்திரா தீவுக்கு அண்மையில் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக இலங்கையின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் கடல் அலை மிக வேகமாக ஊர்களுக்குள் வந்ததன் காரணமாக பெருந்தொகையான மனிதர்கள் இறந்தனர். சொத்துக்கள் அழிந்தன.

ஜப்பான் போன்ற முன்னேறிய நாடுகள் இதுபோன்ற அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றன. பலகையால் அமைக்கப்பட்ட வீடுகளும், வீடுகளில் குறைந்தளவு பொருட்களைப் பயன்படுத்தலும், சுனாமி உண்டாவது தொடர்பான முன்னெச்சரிக்கை வழங்குவதற்கான நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தலும், பாதுகாப்பான இடங்கள் அமைத்தலும் இவற்றுள் சிலவாகும்.

**41) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்கருத்துச் சொற்களை எழுதுக.**

1. குறைந்த ..............................
2. அண்மையில் ..............................
3. நவீனம் ..............................
4. வேகமாக ..............................
5. இயற்கை ..............................
5. சில ..............................

42) கடல் அலைகள் வேகமாக ஊருக்குள் வருவதை எவ்வாறு அழைப்பர்?

..............................

43) 'சுனாமி' எனும் சொல் எந்த மொழியிலிருந்து வந்ததாகும்?

..............................

44) இவ்விபத்து எவ்வகையான பாதிப்புகளை ஏற்படுத்தும்?

..............................

45) ஜப்பான் சுனாமியிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப்பயன்படுத்தும் இரண்டு வழிமுறைகள் தருக.

..............................

## வெளியீடு 06 — வினாக்களுக்குரிய விடைகள்

(10) (11) தம்பிக்கு கொடுத்தது = $\frac{2}{6}$

மீதிப்பங்கு = $\frac{4}{6}$

$\frac{4}{6}$ பங்கு = 90/-


| $\frac{1}{6}$ | $\frac{1}{6}$ | $\frac{1}{6}$ | $\frac{1}{6}$ | $\frac{1}{6}$ | $\frac{1}{6}$ |
|---|---|---|---|---|---|

தம்பி 45/- ரூ 90/-

∴ அவனிடமிருந்த பணம் = 90 + 45 = 135/

(12) பொருத்தமான விடை

(13) முதலில் உருவிலுள்ள அச்சுக்களை இணைத்து, பின் நிழற்றப்பட்ட பகுதியின் பின்னத்தை கணிக்க $\frac{1}{8}$




(14) பெரிய கோலின் நீளம் - சிறிய கோலின் நீளம் = 9.5cm - 8.5cm = 1cm

(15) 6, 8, 10, 12, 14, 16, 18, 20 (16) !

✦ முதலில் அப்பிள் பழத்தின் நிறையைக் கண்டு பிடித்த பின், ஏனைய பழங்களின் நிறையை கண்டு பிடிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| ✦ அப்பிள் | 100g | ✦ கொய்யா | 75g |
| ✦ தோடை | 75g | ✦ பப்பாசி | 175g |
| ✦ ஸ்ரோபெரி | 35g | ✦ வாழை | 100g |

(17) பப்பாசி (18) அப்பிள், வாழை (19) ஸ்ரோபெரி

(20) பரிமாறப்பட்ட குளிர்பானம்

| | |
|---|---|
| l | ml |
| | 85 |
| x | 32 |
| 2l | 720ml |

(21) இரு தட்டை முகமும் ஒரு வளைந்த மேற்பரப்பும் உண்டு ∴ 3

(22) ~~அனுஷா~~ + ~~அனோஜன்~~ + சஹுஜனின் நிறை = 67kg
~~அனுஷா~~ + ~~அனோஜன்~~ = 41kg -
சஹுஜனின் நிறை = 21kg

(23) பேருந்திலுள்ள பயணிகள் = 35
பஸ்தரிப்பில் ஏறிய பயணிகள் = (11 - 4) 7
∴ 35 + 7 = 42 பேர்

(24) 45 + 116 + 142 = 303km

(25)

| | | | |
|---|---|---|---|
| A - | சீனி | - 1kg | = 68/- |
| B - | தேயிலை | - 1kg | = 380/- |
| C - | மாசி | - 1kg | = 900/- |
| D - | பருப்பு | - 1kg | = 140/- |
| | | | = 1488/- |

(26) C, B, D, A

(27)

| | | | |
|---|---|---|---|
| 250g | மாசி | ⇨ 900/- : 4 | = 225/- |
| 250g | சீனி | ⇨ 68/- : 2 | = 34/- |
| | | | = 259/- |

(28)

| | | |
|---|---|---|
| 250g | சீனி | ⇨ 17/- |
| 250g | தேயிலை | ⇨ 95/- |
| 250g | மாசி | ⇨ 225/- |
| 250g | பருப்பு | ⇨ 35/- |

= 1488 : 4 = 372/-

✦ இந்த முறை மூலம் விடையைக் கண்டு பிடிப்பதே சிறந்தது.

**எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியீடு 7 இற்கான விடைகள் வெளிவரும்.**

(தொடரும்...)



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013



1.30 மணி



# கல்வி முரசு

வெளியீடு 08








பொருத்தமற்ற படத்தின் கீழ்க் கோடிடுக.

 1)  2)  3)


 1)  2)  3)

| அ | E | P |
|---|---|---|
| 1) | 2) | 3) |

 1)  2)  3)

 1)  2)  3)

**வீட்டிலிருந்து புறப்பட்ட நிசானா மீண்டும் வீட்டுக்குத் திரும்பிய வரைபடம் தரப்பட்டுள்ளது. கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.**




06) மேற்குத் திசையில் எத்தனை முறை திரும்பினாள்?

..............................

07) அவள் அதிகமாகத் திரும்பியது வலது பக்கமா? இடது பக்கமா?

..............................

08) இறுதியாக வீட்டுக்குச் செல்லும்போது எப்பக்கமாகத் திரும்பினாள்?

..............................

09) றிசானா பயணம் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு?


.................................................................................

10) அவள் ஒரு நாளைக்கு 4 முறை இதுபோல் நடந்தால் ஒரு நாளில் பயணம் செய்யும் தூரம் எவ்வளவு?

.................................................................................

**பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

பருவ கால மழை பெய்யத் தொடங்கியது. மரஞ் செடி கொடிகள் 11. (நீலம், பச்சை, மஞ்சள்) நிறமாகக் காட்சியளித்தன. ஆறு, குளம் 12. (நீரால், மண்ணால், கல்லால்) நிரம்பி வழிகின்றன. சிறுவர்கள் 13. (கப்பல், கார், விமானம்) செய்து விளையாடுகின்றனர். உழவர்கள் 14. (கவலையுடன், மகிழ்ச்சியுடன், கோபத்துடன்) வயலுக்குச் செல்கின்றனர். அவர்கள் ஆர்வத்துடன் 15. (கதைக்க, பாட்டுப்பாட, வேலைசெய்ய) ஆரம்பித்தனர்.




**கடந்த 5 வருடங்களில் கேகாலை மாவட்டத்தின் சிறுபோக, பெரும்போக நெல் உற்பத்தி தரப்பட்டுள்ளது. தரப்பட்ட வினாக்களுக்கு வரைபைக் கொண்டு விடையளிக்குக.**

16) 1997 ஆம் வருடத்தில் மொத்த நெல் உற்பத்தி?
1. 3000 கி.கி 2. 6000 கி.கி 3. 60000 கி.கி

17) நெல் உற்பத்தி கூடிய வருடம்?
1. 1996 2. 1999 3. 1998

18) நெல் உற்பத்தி குறைந்த வருடம்?
1. 1997 2. 1998 3. 1995

19) சிறுபோகத்தில் கூடிய நெல்லுற்பத்தியான வருடம்?
1. 1998 2. 1999 3. 1995

20) பெரும்போகத்தில் குறைந்த நெல்லுற்பத்தியான வருடம்?
1. 1996 2. 1997 3. 1999

21) 1998 ஆம் வருடத்தில் சிறுபோகத்திற்கும் பெரும்போகத்திற்கும் இடையிலான வித்தியாசம்?
1. 2000 கி.கி 2. 5000 கி.கி 3. 4000 கி.கி

22) 5 வருட காலத்திலும் பெரும்போகத்தில் மொத்த நெல் உற்பத்தி.
1. 39000 கி.கி 2. 16000 கி.கி 3. 23000 கி.கி

23) 5 வருட காலத்திலும் சிறுபோகத்தில் மொத்த நெல்லுற்பத்தி?
1. 16000 கி.கி 2. 39000 கி.கி 3. 15000 கி.கி



**சொற்களைச் சரியாக எழுதி கருத்துள்ள வசனமாக்குக.**

24) உள்ள / திமிங்கிலம் / உலகில் / பெரியது / விலங்குகளில் / மிகப் / ஆகும்.

.................................................................................

25) சென்றோம் / கடற்கரைக்கு / நானும் / உலாவச் / தாத்தாவும் / நேற்று / மாலை

.................................................................................

**தரப்பட்ட வாக்கியம் பிழை என்பதற்கான காரணத்தைத் தெரிந்து கோடிடுக.**

26) சமீம் ஆமையின் இறகொன்றை எடுத்து வந்தான்.
1) சமீமுக்கு கண்பார்வை குறைவு 2) இறகு காற்றில் பறந்து செல்லும்
3) ஆமைக்கு இறகு காணப்படாது

27) மா மரத்திலிருந்து விழுந்த பழம் காற்றில் மிதந்து சென்றது.
1) அன்று காற்று வீசவில்லை 2) மரத்திலிருந்து பழம் கீழே விழாது
3) மாம்பழம் நிறை கூடியது காற்றில் மிதந்து செல்லாது

28) தீக்கோழி பறந்து சென்று பலா மர உச்சியில் நின்றது.
1) தீக்கோழி பறக்க முடியாத பறவையாகும் 2) தீக்கோழி ஒரு பறவையல்ல
3) பலா ஒரு செடியாகும்

**கோலத்தை அவதானித்து அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க.**

29) 1 5 9 - 1) 11 2) 13 3) 15

30)


31) T U V - 1) A 2) X 3) W

32)


33)


**சரியான விடையைத் தெரிந்து கோடிடுக.**

34) வானில் எப்போதும் காணப்படுவது?
1. சூரியன் 2. சந்திரன் 3. வெளி

35) பாடசாலையில் எப்போதும் இருப்பது?
1. கட்டடம் 2. அதிபர் 3. ஆசிரியர்

36) படகு ஓட்டுவதற்குத் தேவையானது?
1. பாய் 2. துடுப்பு 3. மரம்

37) கதிரையொன்றில் எப்போதும் காணப்படுவது?
1. பிரம்பு 2. குசன் 3. கால்

38) நாய் எந்நேரமும்.
1. குரைக்கும் 2. வாலை ஆட்டும் 3. நாலுகால் பிராணி

39) புகையிரதத்தில் காணப்படாதது.
1. சில்லு 2. டயர் 3. இருக்கை

40) நாட்காட்டியொன்றில் இருக்க வேண்டியது?
1. எண்கள் 2. முள் 3. படம்

# பரபரப்பான அரசியல் திருப்பங்கள்;

# சிரஞ்சீவி உட்பட 22 பேர் பதவியேற்பு


(புதுடெல்லி)

பரபரப்பான அரசியல் திருப்பங்களுடன் மத்திய அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது.

மத்திய அமைச்சர்களாக மொத்தம் 22 பேர் நேற்று பதவியேற்றுக் கொண்டனர். கபினட் அமைச்சர்களாக 7 பேரும், சிரஞ்சீவி மற்றும் மணீஷ் திவாரி ஆகியோர் தனிப் பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்களாகவும் சசிதரூர் உள்ளிட்ட 13 பேர் இணை அமைச்சர்களாகவும் பதவியேற்றுக் கொண்டனர்.

இராஷ்டிரபதி பவனில் நேற்று காலை நடந்த விழாவில் அவர்களுக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணமும் இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். நாடாளுமன்ற தேர்தல் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் சிறப்பாகச் செயற்பட்டு மீண்டும் ஆட்சியைப்பிடிக்க பல்வேறு அதிரடி மாற்றங்களில் காங்கிரஸ் கட்சி இறங்கியுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள், பெற்றோல், டீசல், காஸ் விலை உயர்வு, அந்நிய நேரடி முதலீட்டுப்பிரச்சினை, சுரங்கத்துறை ஊழல் என சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில்



பல அமைச்சர் பதவிகள் காலியாக உள்ளன. இதனால் சில அமைச்சர்கள் பல பொறுப்புகளை வகித்து வருகின்றனர். அரசு நிர்வாகத்தை திறம்பட நடத்த முடியாத நிலையில், அமைச்சரவையை மாற்றி அமைக்க பிரதமர் மன்மோகன் சிங் முடிவு செய்தார்.

மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை மம்தா பானர்ஜியின் திரிணமூல் காங்கிரஸ் விலக்கி கொண்டதால், அந்தக் கட்சியைச் சேர்ந்த 6 அமைச்சர்கள் இராஜினாமாச் செய்தனர். அறிவியல், தொழில்நுட்ப துறை அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக் உடல்நலக் குறைவு காரணமாக இறந்தார். தகவல் ஒலிபரப்பு துறை அமைச்சர் பிரியரஞ்சன் தாஸ் முனியும் உடல்நலக் குறைவால் அமைச்சரவையில் இருந்து விலகினார். தி.மு.க.வை சேர்ந்த 2 அமைச்சர்கள் ஏற்கனவே இராஜினாமா செய்துள்ளனர். இந்த இடங்களில் புதிய அமைச்சர்களை நியமிக்க காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன், மன்மோகன் சிங் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வந்தார். இந்நிலையில் அமைச்சரவை நேற்று மாற்றி அமைக்கப்பட்டது.



இமாச்சல பிரதேசத்தில் பாலம்பூர் நகரில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள வந்த பா.ஜ.க தலைவர் சுஷ்மா சுவராஜூக்கு அக்கட்சியின் சார்பில் தொப்பி வழங்கப்பட்டது.

## இந்தியச் செய்திகள்

# அமீர்கானுடன் இணைய ஹசாரே திட்டம்

(மும்பாய்)

ஊழலுக்கு எதிராக அடுத்த ஆண்டு ஜனவரியில் தொடங்கவுள்ள அடுத்த கட்ட போராட்டத்தில் பொலிவுட் நடிகர் அமீர்கானையும் தன்னுடன் இணைத்துக் கொள்ள சமூக சேகவர் அன்னா ஹசாரே திட்டமிட்டுள்ளார். ஹஜ் பயணம் சென்றுள்ள அமீர்கான் நாடு திரும்பியதும் அவரிடம் இது குறித்து பேசவும் ஹசாரே முடிவு செய்துள்ளார்.

அமீர்கான் நடத்தி வரும் சத்யமேவ ஜெயதே என்னும் ரி.வி நிகழ்ச்சி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமூக பிரச்சினைகள் குறித்து அலசி வருவதால் அமீர்கானை தனது போராட்டத்தில் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்ள ஹசாரே விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு லோக்பாலை வலியுறுத்தி டில்லியில் ஹசாரே நடத்திய உண்ணாவிரத போராட்டத்தில் அமீர்கான் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. மேலும் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள் உள்ளிட்டோர் அடங்கிய குழு ஒன்றை உருவாக்கும் நடவடிக்கையிலும் ஹசாரே இறங்கி உள்ளார் எனத் தெரியவருகிறது.

# விஜயகாந் மீது வழக்குத் தாக்கல்

சென்னையில் பத்திரிகையாளர்களை 'நாய்' என்று தரக்குறைவாகப் பேசியதாக தே.மு.தி. தலைவர் விஜயகாந்த் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தே.மு.தி.க.வைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் சுந்தர்ராஜன், மைக்கேல் ராயப்பன், அருண்பாண்டியன் உட்பட நான்கு பேர் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினர். இது குறித்து கேள்விகேட்ட பத்தரிகையாளர்கள் மீது ஆவேசமடைந்த தே.மு.தி.க. தலைவர் பத்திரிகையாளர்களைத் திட்டியதுடன், தரக்குறைவாக நடந்து கொண்டுள்ளார். மேலும் அவருடன் இருந்த ஒரு எம்.எல்.ஏ. பத்திரிகையாளர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து விஜயகாந்த் மீதும் அவருடன் இருந்த எம்.எல்.ஏ.மீதும் பத்திரிக்கையாளர்கள் வழக்குப் பதிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.


# தலைமைச் செயலகம் இன்று முற்றுகை;

# பலத்த பாதுகாப்புக்கு பொலிஸார் ஏற்பாடு

(சென்னை)

கூடங்குளம் விவகாரத்தில் தலைமை செயலகத்தை இன்று முற்றுகையிடப் போவதாக போராட்டக்குழுவினர் அறிவித்துள்ளதால் சென்னையில் வரலாறு காணாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூடங்குளம் அணு உலையை மூடக்கோரியும், அணு உலையில் யுரேனியம் நிரப்பக் கூடாது என்பதை வலியுறுத்தியும் போராட்டக் குழுவினர் இன்று சட்டப்பேரவை கூட்டம் நடக்கும் நாளில், தலைமைச் செயலகத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்தனர். இதற்கு, ம.தி.மு.க, பா.ம.க, புதிய தமிழகம், மனித நேய மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள், தமிழர் வாழ்வுரிமைக் கட்சி, பழ.நெடுமாறனின் உல



கத் தமிழர் பேரவை, திராவிட விடுதலைக் கழகம், தமிழர் தேசியக் கட்சி, மீனவர் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. போராட்டக் குழுவினர் அறிவித்த நேரத்தில் சட்டப்பேரவைக் கூட்டம் நடக்கிறது. இதனால் கடந்த இரு நாட்களாகவே இரவு நேரத்தில் தலைமைச் செயலகத்திற்குச் செல்லும் வீதியை பொலிஸார் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்.

போராட்டக் குழுவினர பல நாட்களுக்கு முன்ன்தாகவே சென்னைக்குள் வந்து உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிப்பதால், கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர். தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வரும் ரயில்கள், பேருந்துகளையும் பொலிஸார் கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. போராட்டத்துக்கு பொலிஸார் அனுமதி மறுத்துள்ளதோடு சென்னை நகர்முழுவதும் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனால தலைமைச் செயலகப் பகுதியில் 2 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூடி நின்றால் அவர்களைக் கைது செய்யவும் திட்டமிட்டுள்ளனர்.

# திரைப்பட அதிபர்கள் சங்க அலுவலகத்தில் முற்றுகை

தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தில் மோதல் ஏற்பட்டுள்ளது. எஸ்.ஏ. சந்திரசேகரனுக்கு எதிராக அதிருப்தி கோஷ்டியினர் கே.ஆர். தலைமையில் போர்க்கொடி தூக்கியுள்ளனர். சென்னையில் போட்டிப் பொதுக்குழுவையும் இவர்கள் கூட்டுகின்றனர். இதற்கு நீதிமன்றத்திலும் அனுமதி பெற்றுள்ளனர். நேற்று முன்தினம் காலை அதிருப்தி அணியைச் சேர்ந்த தயாரிப்பாளர்கள் அண்ணா மேம்பாலம் அருகில் உள்ள தயாரிப்பாளர் சங்க அலுவலகத்தில் திரண்டனர். அங்கு அலுவலக கதவை எஸ்.ஏ. சந்திரசேகரன் பூட்டி விட்டு சென்று இருந்தார். கதவைத் திறக்க வற்புறுத்தி அலுவலக வாயிலில் அவர்கள் முற்றுகையிட்டனர்.

தயாரிப்பாளர்கள் கே.ஆர். சத்தியஜோதி தியாகராஜன், கே.ராஜன், சீனிவாசன், கலைப்புலி சேகரன், கே.பாலு, ராதாகிருஷ்ணன், அழகன் தமிழ்மணி, டி.சிவா, ஜாகுவார் தங்கம், கமிலா நாசர், வடிவேலு, சோழா பொன்னுரங்கம், விஜயன், ராஜா உள்ளிட்ட பலர் இந்த முற்றுகையில் பங்கேற்றனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

(12 ஆம் பக்க தொடர்ச்சி...)

## பெண் உயரதிகாரிகளும்....

அவரது நிர்வாகத்தின் கீழிருப்போர் .அவரது அதிகாரத்தின் கடுமையை உணர்வதில்லை. சச்சினிடம் பெண்மை மிகுதி. தோனியிடம் ஆண்மையும் பெண் மையும் சமநிலையில் இருக்கிறது.


இந்த சமநிலை குலையும் போது மனிதன் தன்னம்பிக்கையை அமைதியை இழக்கிறான், நெருக்கடிக்குள்ளாகி பலவீனமாகிறான். ஆண்கள் எந்தளவு தமக்குள் ஆண்மையை மிகுதியாக விடக் கூடாதோ பெண்களும் அதுபோல் பெண்மை அதிகமாக அனுமதிப்பது ஆகாது. அதிகாரத்தில் இருக்கும் பெண்கள் ஆண்களைப் போல் நடக்க முயல்கிறார்கள் என்பது பொய். அவர்கள் மிகுதியான பெண்மையுடன் இயங்குகிறார்கள், 'பெண்மை' என்பது நாம் கற்பனாவாதமாய் புரிந்து கொள்வது போல் அத்தனை சாதகமானது அல்ல என்பதே உண்மை.

பெண்கள் முதலில் முழுக்க 'பெண்ணாவதில்' இருந்து தம்மை பாதுகாக்க வேண்டும். சுதந்திர சிந்தனை கொண்ட பெண்களை நிர்வாகங்கள் உயர்பதவிகளில் அமர்த்துவது மேற்குறிப்பிட்ட பிரச்சினையின் தீவிரத்தை குறைக்க உதவும். மேலாண்மை பட்டறைகளை நிர்வாகங்கள் நடத்த வேண்டும். கீழுள்ள ஆண் பெண்களை கனிவாக நடத்தி அடிப்படை மரியாதை நல்கியே கூட கட்டுப்படுத்த முடியும் என்பதை கற்பிக்க வேண்டும். இந்த அடிப்படை அறத்தை நிறுவன விதிகளில் ஒன்றாக வலியுறுத்த வேண்டும்.

ஆண்கள் உலகை ஆண்டதால் தான் இத்தனை போர்கள், வன்முறை, உயிரிழப்புகள் என்று பெண்ணியவாதிகள் இதுவரை பேசி வந்தார்கள். ஆனால் இப்போது பெண்கள் விடுதலை பெற்று ஒரு சின்ன அளவில் உயரதிகாரி நிலையை அடையும் போது பிற பெண்கள் அவர்களிடம் இருந்து தலைதெறிக்க ஓடித் தப்ப பார்க்கிறார்கள். ஆக ஆண்மை அளவுக்கு பெண்மையும் ஆபத்தானது தான்.

இனி இந்த உலக சமூகத்துக்கு ஆண்மையும் பெண்மையும் மிகாதவர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களால் தான் மற்றொரு உலகப்போரை தடுக்கவும் மானுட அறத்தை தக்க வைக்கவும் முடியும்.

# இலவச கருக்கலைப்பு பிரான்சில் சட்ட மசோதா



(பிரான்ஸ்)

ஏழை, 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு இலவசமாக கருக்கலைப்பு செய்வதற்கான சட்ட மசோதா பிரான்ஸ் தேசிய அவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இந்த இலவச கருக்கலைப்புத் திட்டம் செயற்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ஏழை மற்றும் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பயனடைய முடியும்.

மேலும் பிற பெண்களும் கருக்கலைப்புக்கான செலவில் 80 சதவிகிதத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக இந்த மசோதா மேலவையில் நிறைவேற்றப்பட இருக்கிறது. இந்த மசோதாவில், தேவையற்ற கர்ப்பத்தைக் கலைக்கும் உரிமை பெண்களுக்கு உள்ளது.

அதே நேரத்தில் கருக்கலைப்புக்கான செலவு அதிகமாக உள்ளது. எனவே இலவச கருக்கலைப்புத் திட்டம் அவசியமாகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில், பெற்றோரின் அனுமதி பெறாமல் கருக்கலைப்பு செய்து கொள்ள திருமணமாகாத பெண்களுக்கு உரிமை உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

## இறுதிக்கட்ட பிரசாரம் புயலால் பாதிப்பு



(வசிங்கடன்)

அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரங்கள் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில் கரீபியன் கடல் பகுதியில் உருவான சாண்டி என்ற புயல் அங்குள்ள ஜமேக்கா, கியூபா ஆகிய நாடுகளைத் தாக்கிப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

இந்தப் புயலுக்கு இதுவரையிலும் 41 பேர் உயிரிழந்துள்ளனர். இது தற்போது அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது.

அநேகமாக வெர்ஜினியா, மேரிலாந்து, புளோரிடா மாநிலங்களை தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக 4 நாட்கள் மழை நீடிக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இதனால் அங்குள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

இந்தப் புயல் எச்சரிக்கை ஜனாதிபதி தேர்தல் இறுதி கட்ட பிரசாரத்தில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. குடியரசு கட்சி வேட்பாளரான மிட் ரோம்னி நேற்று இரவு வெர்ஜினியா கடற்கரையில் பேச இருந்த பிரசார கூட்டத்தை இரத்து செய்துவிட்டார்.

இதேபோல புளோரிடா பகுதியில் ஒபாமா மேற்கொள்ள இருந்த பிரசார சுற்றுப் பயணம் குறித்து தீவிர ஆய்வு செய்து வருவதாக ஜனநாயகக் கட்சியினர் தெரிவித்தனர்.

எனவே இந்த புயலால் எதிர்வரும் வியாழக்கிழமை வரையிலும் இரு கட்சிகளின் பிரசாரமும் முடங்கி விடுகிறது. தேர்தலில் முன்கூட்டிய வாக்களிக்கும் முறை அமெரிக்காவில் உண்டு.

எனவே தற்போது நாடு முழுவதும் 50 மாநிலங்களில் இந்த முன்கூட்டியே வாக்குப் பதிவுகள் நடந்து வருகின்றன. இதில் ஏராளமானோர் ஆர்வமுடன் வாக்களித்து வருகிறார்கள்.

இதுவரையில் 18 சதவிகிதம் பேர் வாக்களித்துள்ளனர். நவம்பர் 6 ஆம் திகதிக்குள் 35 சதவிகிதம் முதல் 40 சதவிகிதம் பேர் வாக்களிப்பார்கள் என தேர்தல் அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த வாக்குப்பதிவிலும் ஒபாமா முன்னிலையில் இருப்பதாக புதிய கருத்து கணிப்பில் தெரியவந்தது. ஒபாமாவுக்கு 54 சதவிகித ஆதரவும், மிட் ரோம்னிக்கு 39 சதவிகித ஆதரவும் காணப்பட்டது. இதை அறிந்ததும் ஒபாமா ஆதரவாளர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

# 2000 ஆண்டுகள் பழமையான கல்லறை ரெடால்குவில் கண்டுபிடிப்பு



மத்திய அமெரிக்க நாடான கவுதமாலாவின் மேற்கில் ரெடால்குலே என்னும் பகுதி உள்ளது. இங்குள்ள ஒரு கோவிலில் பழங்காலத்து மாயான் நாகரிக கல்லறையை ஆராய்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து ஆராய்சியாளர்கள் கூறியதாவது,

இந்தக் கல்லறை 2000 வருடத்திற்கு முன்பு இப்பகுதியை ஆண்ட ஒரு மதத்தலைவரின் கல்லறையாக இருக்கலாம்.

ஆனால் இக்கல்லறையில் மனித எலும்புகள் எதுவும் கிடைக்கவில்லை. இங்கு எமரால்டு எனப்படும் வைர ஆபரணங்களும், மனிதத் தலையுடன் கூடிய கழுகுச் சிற்பமும் கிடைத்துள்ளன. கி.மு. 700 - 400 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இது கட்டப்பட்டிருக்கலாம்.

இந்த கல்லறையில் புதைக்கப்பட்ட மன்னருக்கு கட்ச்மேன் என்று ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டுள்ளனர். இவர் மத்திய அமெரிக்காவிலுள்ள ஓல்மெக் மற்றும் மாயான் நாகரிகங்களை இணைக்கும் ஒரு பாலமாக இருந்திருக்கலாம்.

கி.பி. 250 - 800 ஆண்டு காலக்கட்டங்களின் போதும், மத்திய அமெரிக்காவில் மாயான் நாகரிக மக்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களின் ஆட்சி ஹோண்டூராஸ் முதல் மெக்சிகோ வரை பரந்து விரிந்து இருந்தது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

# கனடாவில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை



கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் இரவு 11.14 மணிக்கு 7.7 ரிக்டர் அளவுகோலில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்பட்ட தேச விபரங்கள் குறித்து இதுவரையிலும் தகவல் ஏதும் தெரியவரவில்லை.

இதனையடுத்து பிரிட்டிஷ் கொலம்பியா, வான்கூவர் தீவு மற்றும் அலாஸ்காவுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தனது மூன்று மாத குழந்தைக்கு பாலில் கஞ்சா கலந்து கொடுத்த தாய்

(நியுசிலாந்)

நியூசிலாந்தில் மூன்று மாத குழந்தை ஒன்றுக்கு தாய்ப் பாலில் கஞ்சா கலந்து கொடுத்ததாக தாய் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

நியூசிலாந்தில் இப்படி ஒரு விஷயம் நீதிமன்றத்தில் வந்திருப்பது இதுவே முதல்முறை என்று கூறப்படுகிறது.

18 வயதுக்கும் குறைவான வயதுடைய ஒரு நபருக்கு தெரிந்தே போதை மருந்து கொடுத்தார் என்ற குற்றவியல் சட்டப் பிரிவின் கீழ் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

29 வயதாகும் தாய், நீதிமன்றத்தில் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார். இத்தாய் ஆறு மாத காலம் அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



ஒருவர் போதை மருந்துக்கு அடிமையாகும் போது அவரும் பாதிக்கப்படுகிறார், அவரைச் சுற்றியுள்ளவர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையே இந்த விவகாரம் காட்டுகிறது என்றும், இந்த தாய்க்கும் பிள்ளைக்கும் உதவியும் ஆதரவும் தேவைப்படுகிறது எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# முன்னாள் பிரதமருக்கு சிறை

(இத்தாலி)

இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனிக்கு நான்காண்டு சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத்தாலியின் பிரதமராக சில்வியோ பெர்லுஸ்கோனி பதவி வகித்த போது, வரி ஏய்ப்பு செய்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

இதனையடுத்து அவர் மீது குற்றவியல் வழக்கும், வரி ஏய்ப்பு செய்ததற்கான வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பெர்லுஸ்கோனிக்கு நான்காண்டு சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இத்தாலிய சட்டப்படி வழக்குகள் மீதான தீர்ப்புகள் இரண்டு கட்ட மேல்முறையீடுகளில் உறுதி செய்யப்பட வேண்டும்.

எனவே பெர்லுஸ்கோனி தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் நான்காவது முறையாக இத்தாலி தேர்தலில் தான் மீண்டும் போட்டியிடப் போவதாக பெர்லுஸ்கோனி கடந்த சில நாட்களுக்கு முன் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் தனியார் பேருந்து தரிப்பிடத்திலுள்ள கழிவு நீரினால் பயணிகள் அசௌகரியம்



மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரானது மன்னார் தனியார் பேருந்து தரிப்பிட பகுதியில் தேங்குவதினால் தனியார் பேருந்து தரிப்பிடத்தில் நிற்கும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் ரீ.ரமேஸ் தெரிவிக்கையில் மன்னார் அரச பேருந்து தரிப்பிடப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றின் கழிவு நீர் பின்பகுதியில் அமைந்துள்ள எமது தனியார் பேருந்து தரிப்பிடப் பகுதியில் தேங்குகின்றது.

இது தொடர்பில் குறித்தவர்த்தக நிலைய மற்றும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு பல தடவை எடுத்துக் கூறியுள்ளோம். ஆனால் அதற்கு அவர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

தற்போது மழை காலம் என்பதினால் தேங்குகின்ற மழை நீருடன் குறித்த கழிவு நீரும் கலக்கின்றது. இதன் காரணமாக பாரிய துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் எமது சங்கத்தின் சார்பாக நாங்கள் மன்னார் நகர சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். இந்நிலையில், மன்னார் நகர சபை குறித்த கழிவு நீரை வாய்க்காலுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது எனத் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மற்றும் கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களுக்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

நாளை காலை 10.00 மணிக்கு சங்கிலியன் வீதியிலுள்ள நல்லூர் மகப்பேற்று சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளது. எனவே இவ்விரண்டு பிரிவுகளிலும் உள்ள உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களும் நாளை இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகர சபை பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதன் அறிவித்துள்ளார். (இ)

# கிறிஸ்மஸ் தீவிலிருந்து மேலும் எண்மர் நாடு கடத்தல்

(சிட்னி)

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்ரேலியா விற்குச் சென்ற மேலும் எட்டு இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளதாக அவுஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் 29 பேர் இதுவரை இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு, குடியகல்வு திணைக்களம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 14 பேர் விசேட விமானம் மூலம் திருப்பியனுப்பப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கிறிஸ்மஸ் தீவிலிருந்து 7 பேர் வரை கொழும்புக்கு திருப்பியனுப்பப்பட்டனர்.

இதேவேளை, அவுஸ்ரேலிய அரசாங்கத்திடம் பணத்தைப் பெற்று அதற்கான உடன்படிக்கையை மீறிய இலங்கை புகலிடக் கோரிக்கை யாளர் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த மாத் முற்பகுதியில் மாத்தறை குடாவெல்ல கடற்பிராந்தியத்தில் வைத்து மீனவர்களை தாக்கி விட்டு அவர்களின் படகின் மூலம் அவுஸ்ரேலியாவுக்குச் சென்ற புகலிடக் கோரிக்கையாளர்களில் இவரும் உள்ளடங்குகிறார்.

எனினும் அவரை மாத்திரம் அவுஸ்ரேலிய குடிவரவு திணைக்கள அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர்.

இவர் கடந்த மூன்று கிழமைகளுக்கு முன்னரும் புகலிடக் கோரிக்கையாளராக அவுஸ்ரேலிய கொக்கோஸ் தீவுகளுக்கு சென்ற நிலையில் நவுறு தீவுக்கு அனுப்பப்பட்டார்.

எனினும் நவுறு தீவுக்கு செல்லாமல் இலங்கைக்கு மீண்டும் திரும்பிச் செல்ல அவர் இணங்கியதை அடுத்து அவுஸ்ரேலிய அரசாங்கம் அவருக்கு 3300 டொலர்களை வழங்கி உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்ட பின்னர் இலங்கைக்கு திருப்பியனுப்பி வைத்தது.

இந்தநிலையில் மூன்று கிழமைகளுக்குள் குறித்த இலங்கையர் மீண்டும் ஏனைய 14 பேருடன் படகு மூலம் சட்ட விரோதமாக அவுஸ்ரேலியாவுக்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்தே ஏனைய 14 பேரையும் மாத்தறை குடாவெல்ல சம்பவத்தின் குற்றச்சாட்டின் பேரில் திருப்பியனுப்பிய அவுஸ்ரேலிய அதிகாரிகள் சந்தேகத்திற்குரியவரை மாத்திரம் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைக்காக தடுத்து வைத் துள்ளது.

# வெள்ளை சந்தனத்துடன் பாகிஸ்தான் பிரஜை கைது

(கொழும்பு)

அனுமதிப்பத்திரமின்றி 25 கிலோகிராம் வெள்ளை சந்தனத்துடன் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் பிரஜையை நீர்கொழும்பு பதில் நீதவான் ஜே.எம். ஜயசுந்தர எதிர்வரும 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று உத்தரவிட்டார்.

குறித்த பாகிஸ்தான் பிரஜை நீர்கொழும்பு, ஏத்துக்கால பிரதேசத்தில் வைத்து நேற்று நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்

பெட்டி ஒன்றில் மறைத்து வைத்திருந்த நிலையில் வெள்ளை சந்தனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த நபர் பாகிஸ்தான், கராச்சி பிரதேசத்தை சேர்ந்தவராவார்

## போர்க்குற்ற...

தித்துள்ளதாகத் தெரிவித்துள்ள இந்தத் தூதுக்குழுவினர், இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை, அரசியல் தீர்வுத் திட்டத்தை துரிதப்படுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கி அரசுக்கு தாம் பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் சென்றுள்ள இந்தத் தூதுக் குழுவினர், கடந்த ஆண்டு சந்திப்பின்போது தம்மிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை இலங்கையில் உள்ள ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி தரப்பினருடன் கலந்து ஆராய்ந்து விட்டு அங்கு எட்டப்பட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக மீண்டும் பிரிட்டன் வந்ததாகவும் தெரிவித்தனர்.

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு சந்திப்பின் போது புலம்பெயர் தமிழர்கள் கோர்ரிக்கை வைத்ததாகவும் அதுபற்றி தமது தூதுக்குழுவினரும் இணக்கம் தெரிவித்து, அந்த விசாரணைகளை நடத்தவேண்டும் என்று பரிந்துரை முன்வைத்திருப்பதாகவும் இந்தத் தூதுக்குழுவில் இடம்பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி ரகு பாலச்சந்திரன் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

ஆனால் இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் என்ற கோரிக்கைக்கு தாங்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை என்று இதே தூதுக் குழுவில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணாண்டோ பி.பி.சி.யிடம் கூறினார்.

இலங்கையில் நடந்த யுத்தத் தின்போது நடந்ததாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசு மீதோ அல்லது இலங்கை இராணுவம் மீதோ விரல் நீட்டுவதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம். உண்மையில் அதுபற்றி இவர்களுக்கு விளக்குகின்ற வேலையைத்தான் நாங்கள் செய்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 13 ஆவது....

அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்டன.

எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை பிழையாக வழிநடத்த 13 ஆம் திருத்தச் சட்ட ரத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடும்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென ஒன்றிரண்டு கட்சிகள் கோரிய போதிலும் அரசாங்கத்தின் நிலைப்பாடு அதுவல்ல.

பாதுகாப்புச் செயலாளர் 13 ஆம் திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் எதனையும் கூற விரும்பவில்லை. தனிப்பட்ட நபர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கப் போவதில்லை.

அரசாங்கம் என்ற ரீதியில் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான நிலைப்பாடு மாறுபட்டே காணப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இணைந்து எடுக்கும் தீர்மானங்களே அரசாங்கத் தீர்மானங்களாக கருதப்பட வேண்டும்.

வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தி மாகாணசபை ஆட்சியை நிறுவ வேண்டும். இதனையே ஜனநாயக அரசியலாகக் கருதப்பட வேண்டுமென திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

## பௌர்ணமி விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு பூரணா புட்கலா சமேத ஹரிகரபுத்திர ஐய்யனார் ஆலய மாதாந்த பௌர்ணமி விழா இன்று நடைபெறவுள்ளது.

இன்று மாலை 5.00 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று எம் பெருமான் வீதி வலம்வரவுள்ளார். (இ)

## வடமராட்சி...

தூர்ந்து போயுள்ளன. இதனால் கடலுக்கு நீர் வழிந்தோட முடியாமல் மக்களின் குடிசைகளைச் சூழ்ந்துள்ளது.

வழமைக்கு மாறாக கடும் காற்று வீசுகின்றது. இதனால் கடல் கடும் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் நேற்று மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. கடல் ஏறும் நிலை காணப்படுவதால் மீனவர்கள் தமது படகுகள் மற்றும் கட்டுமரங்களை கடலுக்கு வெளியே இழுத்துப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தியுள்ளனர். வெறும் குடிசைகளில் வசிக்கும் இப்பகுதி மக்கள் பெரும் துன்பகரமான நிலையில் இருக்கின்றனர். இக்காலநிலை தொடருமானால் இப்பகுதியிலுள்ள 2 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்படுவதோடு, இடம்பெயர வேண்டிய நிலையும் ஏற்படும் என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (38)

## மன்னாரிலும்...

ஒரு டெங்கு நோயாளரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சாவக்கட்டுக் கிராமத்திலும் தலைமன்னாரிலும் டெங்குநுளம்பை ஒழிப் பதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர். புகையூட்டி மூலமும் நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.குணசீலன் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை குறித்த...

இடம்பெயர் மக்கள் முழுமையாக மீள்குடியேற்றப்படவில்லை என கனடா சுட்டிக்காட்டியுள்ளது. சர்வதேச தர நிர்ணயங்களின் அடிப்படையில் இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டனரா என்பதில் சந்தேகம் நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றின் விசாரணைகள் எந்தளவிற்கு பூர்த்தியாகியுள்ளன என்பது பற்றி பிரித்தானியா கேள்வி எழுப்பியுள்ளது.

## இலங்கைக்கு...

கல் கடிதத்தை இந்தியப் பிரதமரிடம் கையளித்த பின்னர், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே இலங்கை விவகாரம் குறித்து கருத்துரைத்தார்.

அவர் அதன்போது, இலங்கையில் தமிழ் மக்களின் புனர்வாழ்வு மற்றும் அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பு தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை அரசுக்கு உரிய அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்றார்.

## வட, கிழக்கு...

களில்

குடியிருப்போர் மிக அவதானத்துடன் இருக்குமாறும், மாலை வேளைகளில் இடி மின்னலுடன் தாக்கம் அதிகளவில் இருக்கலாம். எனவே அவதானத்துடன் செயற்படுமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## மாகாண...

குறிப்பிட்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட போதிலும், இதுவரையில் தேர்தல் தினம் நிர்ணயிக்கப் படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையரின் உரிமைக்கு இந்திய அழுத்தம் அவசியம்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

இலங்கை பிரஜைகளின் உரிமைகளை உறுதி செய்ய இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியக் கிளை கோரியுள்ளதுடன் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோருக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டோருக்கு எதிராக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கோர வேண்டுமென வலியுறுத்தி 50,000 இந்தியப் பிரஜைகளின் கையொப்பங்களுடன் கூடிய விசேட மகஜர் ஒன்று இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகள் நடைபெறவுள்ளதாகவும் இதனால் இந்தத் தருணத்தில் இலங்கை விவகாரம் தொடர்பில் அழுத்தம் கொடுக்க முடியும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்தல், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகள் அமுல்படுத்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோரை விடுதலை செய்தல், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்தல், தேசிய மனித உரிமை செயற்திட்டத்தை அமுல்படுத்தல் உள்ளிட்ட சில விடயங்கள் குறித்து இலங்கை கவனம் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்த போதிலும் இதுவரையில் கவனம் செலுத்தப்படவில்லை என சர்வதேச மன்னிப்புச்சபையின் இந்தியக்கிளை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# உணவுப்பொருள் சட்டவிதி; தெளிவுபடுத்த விசேட பிரிவு

(கொழும்பு)

வெளிநாடுகளில் காணப்படுகின்ற உணவுப்பொருட்களின் சட்ட விதிமுறைகள் குறித்து உணவுப் பொருள் ஏற்றுமதியாளர்களைக் தெளிவுபடுத்தும் விசேட பிரிவொன்றை ஸ்தாபித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு உணவு ஏற்றுமதியாளர்கள் இடையே காணப்படுகின்ற பிரச்சினைகளை குறைத்துக்கொள்ளும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் 'சூழல் மற்றும் தொழில் சுகாதாரம் தொடர்பான பணிப்பாளர் டொக்டர் ஆனந்த ஜயலால் தெரிவித்தார்.

உலக வர்த்தக ஸ்தாபனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைக்கு அமைய உள்நாட்டு உணவு ஏற்றுமதியாளர்கள் வெளிநாடுகளிலுள்ள உணவு சட்ட விதிகள் தொடர்பில் அறிந்திருக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய வெளிநாடுகளிலுள்ள உணவு சட்ட விதிமுறைகள் தொடர்பில், உள்நாட்டு உணவுப்பொருள் ஏற்றுமதியாளர்களை தெளிவுபடுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள உணவுப்பொருட்கள் தொடர்பான சட்ட விதிமுறைகளை அறிந்துகொள்வதற்காக சுகாதார அமைச்சில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட பிரிவின் ஊடாகத் தகவல்களை உரிய முறையில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நூதனசாலை கொள்ளை; பிரதான சந்தேகநபர் கைது

(கொழும்பு)

கொழும்பு தேசிய அரும்பொருட் காட்சியகத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய அரும்பொருட் காட்சியகத்தில் கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி புராதன வாள் மற்றும் தங்க நாணயங்கள் உட்பட பல விலைமதிக்க முடியாத பொருட்கள் காணாமற் போயின.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் போது, தொடர்ச்சியாக கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களும் சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்து வந்தனர்.

இந்நிலையில், நூதனசாலைக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பொறியியல், தொழில்நுட்ப கற்கை மாணவர் இணைவதில் வீழ்ச்சி

பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் இணைந்துகொள்வதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இளைஞர் விவகாரம் மற்றும் திறன் விருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த நிறுவனங்களில் காணப்படுகின்ற வசதிகளுக்கு ஏற்றவாறு மாணவர்கள் இணைந்து கொள்வதில்லை என அமைச்சின் செயலாளர் கே.ஏ.திலகரட்ண தெரிவித்துள்ளார்.

பொறியியல் கல்வித் திணைக்களத்தின் கீழ் 28 பொறியியல் கல்லூரிகளும், ஒன்பது தொழில்நுட்பக் கல்லூரிகளும் நிறுவப்பட்டுள்ள நிலையில், அதன் ஊடாக பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பொறியியல் பாடநெறிக்கு இணைத்துக்கொள்ளக்கூடிய மாணவர்கள் தொகையை விட குறைந்தளவான மாணவர்களே இந்த பாடநெறியை பயில்வதற்கு இணைந்து கொள்கின்றனர்.

ஆறு மாதங்களுக்கான பாடநெறியை சிறந்த முறையில் பயின்று தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்ற நிலையில் மாணவர்களிடம் இருந்து போதியளவில் ஆர்வம் காணப்படவில்லை என அவர்கவலை தெரிவித்துள்ளார்.

பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு நாடு முழுவதும் மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிலுவையை செலுத்தாவிட்டால் எரிபொருள் விநியோகம் குறைப்பு

## மின்சார சபைக்கு எச்சரிக்கை

தமக்கு செலுத்த வேண்டிய 50 மில்லியன் ரூபாவை செலுத்தாவிட்டால், எரிபொருள் விநியோகத்தை குறைக்கப் போவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபையிடம் தெரிவித்துள்ளது

இலங்கை மின்சார சபை மின்சார உற்பத்தியின் நிமித்தம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து கடன் அடிப்படையில் எரிபொருளை கொள்வனவு செய்து வருகிறது.

இதன் அடிப்படையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மின்சார சபை 50 மில்லியன் ரூபாய்களை செலுத்த வேண்டியுள்ளது.

இதனையடுத்து குறித்த நிலுவையை செலுத்துமாறும் இல்லையேல் எரிபொருள் விநியோகத்தை குறைக்கப்போவதாகவும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் எச்சரித்துள்ளது.

எனினும் மாதாந்தம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு தமது சபை 1.3 மில்லியன் ரூபாய்களை எரிபொருள் கொள்வனவுக்காகச செலுத்துகின்ற போதும் நிலுவையை செலுத்த முடியாதுள்ளதாக மின்சார சபை தெரிவிததுள்ளது.

எனவே குறித்த விடயத்தை திறைசேரியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்போவதாக் மின்சார சபை அறிவித்துள்ளது.

## மின்னல் தாக்கி 44 பேர் பலி

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் மின்னல் தாக்குதலின் காரணமாக 44 பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டின் பல பாகங்களிலும், மின்னல் தாக்குதலுக்கு இலக்கான பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக இந்நிலையம் சுடட்டிக்காட்டியுள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் மின்னல் தாக்குதலின் காரணமாக ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். ஏப்ரல் மாதத்திலேயே மின்னல் தாக்கம் காரணமாக அதிகபடியாக 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே மழைகாலங்களில் மக்கள் தமக்கான பாதுகாப்பு குறித்து அவதானத்துடன் செயற்படவேண்டும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது

# மதகு மூடப்பட்டதால் வெள்ள நீர் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேசத்திலுள்ள வட்டு மேற்கு மாவடிப் பகுதியில் உள்ள வெள்ள நீர் வழிந்தோடும் மதகு மூடப்பட்டுள்ளமையால் நீர் வழிந்தோட முடியாது தேங்கி நின்று டெங்கு பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மாலடி வீதி புனரமைப்பு நடவடிக்கைகளின் போது மதகு திறக்கப்படாது மூடப்பட்டு அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுவது தொடர்பாக பல முறை தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். வெள்ள நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நோய் பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக பருவமழை தற்போது ஆரம்பமாகியுள்ள நிலையில் மழை வெள்ளம் வழிந்தோட இடமில்லாது இப்பிரதேசத்திலுள்ள குடியிருப்புக்காணிகளிற்குள் பரவி மக்கள் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.

எனவே இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் வெள்ள நீர் வழிந்தோடக்கூடிய வகையில் மதகை திறக்க ஆவண செய்யுமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆட்சியைக் கவிழ்க்க சதி என்கிறார் அமைச்சர் எஸ்.பி.

அரசையும், நீதித்துறையையும் மோதவிட்டு ஆட்சியை கவிழ்ப்பதற்கு சதிகாரக் கும்பலொன்று திட்டமிட்டு வருவதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க தெரிவித்தார்.

சட்டவாக்கம், நீதி, நிர்வாகம் முதலான முத்துறை அதிகாரங்களுக்கிடையே மோதலை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற சதிகார கும்பலொன்று மேற்கொள்ளும் ஒரு திட்டமே அண்மைய பணிப் பகிஷ்கரிப்புகளுக்குக் காரணம் என்றார்.

உடுநுவரையில் 'திவிநெகும' வேலைத்திட்டத்தின் நான்காம் கட்டப் பணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வைத்தியர்கள் போன்றவர்களை தூண்டிவிட்டு மேற்படி சதிகாரர்கள் இலாபமீட்ட முயற்சிக்கின்றனர்.

அதிலொரு கட்டமாக அரசையும் நீதித்துறையையும் மோத வைப்பதற்கான முயற்சிகள் இடம் பெறுவதாகவும் எத்தகைய திட்டம் வகுத்தாலும் இவ் அரசை வீழ்த்த முடியாது என்றும் குறிப்பிட்டார்.

# மலேசியா செல்வதற்கு "பயோ-விசா" அவசியம்

(கொழும்பு)

மலேசியாவுக்குள் நுழைவதற்கு இலங்கையர்களுக்கும் "பயோ - விசா" முறைமை தேவை என அந்நாட்டு குடிவரவு திணைக்களம் அறிவித்துள்ளது. விசா மோசடிகளைத் தடுக்கும் வகையிலேயே இந்த முறைமையினை தூதரகங்கள் அறிமுகப்படுத்தியுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் "பயோ - விசா" முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்களின் கைவிரல் அடையாளம் தூதரகங்களினால் உறுதிப்படுத்தப்படும், அத்துடன் மலேசியாவுக்குள் நுழையும் போதும் அந்த கைவிரல் அடையாளம் உறுதிப்படுத்தப்படும்.

பாதுகாப்பு முறைமைகளுக்கு அமைவாக பெற்றுக்கொள்ளப்படும் கைவிரல் அடையாளமானது கடவுச் சீட்டிலுள்ள தரவுகள் மற்றும் தனிப்பட்ட தரவுகளுடன் ஒத்துப்போக வேண்டும்.

இந்தத் திட்டமானது, எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்று தெரிவித்த மலேசியாவின் குடிவரவு திணைக்கள பணிப்பாளர் நாயகம் அலைஸ் அஹமட், சீனா, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் மியன்மார் உள்ளிட்ட நாடுகளும் இந்த "பயோ - விசா" முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மலேசியாவுக்கு சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பெருந்தொகையானோர் சுற்றுலாப் பயணிகளாக வருகை தருவதை அடுத்தே இந்த "பயோ - விசா" முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.